உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விசேஷ Special
விளம்பரத்திற்கு! advertisement

விரோதி வருஷம் (1889 ஆவணி மாதம்
28-ந் திகதி ஆரம்பமானது

[புத்தகம் — ௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ௵ ஆடி ௴ ௧௪௳ (1940 ஜுலாய் 29 திங்கட்கிழமை) [இலக்கம் ௧௨]

திருநீறு

(ஸ்ரீமாந் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A அவர்கள் எழுதியது)

திருச்சிற்றம்பலம்.

சம்பந்தசுவாமிகள் தேவாரம்

மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளதுநீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந் தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத் தகுவதுநீறு உண்மையி லுள்ளதுநீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

நாங்கள் அறியத்தக்க பொருள்கள் பெரும்பாலும் உருவமுடையன. ஆயினும் இவற்றிற்கு முதற்காரணமாகிய மாயை உருவமில்லாதது. மாயையிலிருந்து தோற்றிய மனம்முதலியவைகளும் உருவமில்லாதன. ஆன்மாவுங் கடவுளும் சித்து (அறிவு)ப் பொருள்களாதலால், அவைகள் உருவமுமல்ல; அருவமுமல்ல. அவைகள் உருவத்தையும் அருவத்தையும் கடந்த பொருள்கள். ஆதலால், கடவுள் "அருவத்தினும் உருவத்தினும் அன்றி நின்றான்" என்று கச்சியப்ப முனிவர் பாடியருளினர். உருவமில்லாத பொருளை நாங்கள் நினைப்பதும் வணங்குவதும் இயலாது. எமது நல்லொழுக்கத்துக்கும், நாம அடையவேண்டிய வீட்டின்பத்துக்கும் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. ஆதலால் அவரை வழிபடுதற்குச் சில திருவுருவங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அவருடைய திருவருள் தயிரில் நெய்போல அதிகமாக விளங்கும். அத்திருவுருவங்களாவன சிவனடியார்களும், கோயில்களில் அமைக்கப்படும் திருவுருவங்களும், திருநீறு உருத்திராட்சம் முதலியனவுமாம். இத் திருவுருவங்களை வழிபடுவது கடவுளை வழிபடுவதேயாம். நாம் ஒருவரையொருவர் காணும்பொழுது கும்பிடுகின்றோம் அல்லவா? நாம் கும்பிடுவது தனி மனிதரையன்று. அவர்களில் மறைந்துநிற்கும் கடவுளையே. பொதுவான மனிதர்களிற் கடவுள் இருப்பதாக எண்ணி அவர்களை வணங்குவது தக்கதாயின், கடவுளால் அருளப்பட்ட வேதாகமங்களாலும் திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய சிவஞானிகளாலும் துதிக்கப்படுகின்ற திருநீறு முதலியவைகளை வணங்குவது எவ்வளவு அவசியமானது. சிவலிங்கம் திருநீறு முதலியவற்றிலே திருவருள் அதிகமாக விளங்குவதுமன்றி, அவற்றிலே மிகவுயர்ந்த உண்மைகளும் விளங்குகின்றன. பசுமலம் நெருப்பிலிட்டுச் சுத்தமான திருநீறாவதுபோல ஆன்மாக்களிலுள்ள மலங்கள் சிவபெருமானது ஞானத்தினாற் சுடப்பட ஆன்மாக்களுக்குச் சிவத்தன்மை உண்டாகும் என்பதைத் திருநீறு குறிக்கும். இதனாலே திருநீற்றைக் காணும்போது எங்களைப் பிடித்திருக்கும் மலத்தைப்பற்றிய எண்ணமும், அதை நீக்குவதற்கு நம்மைக் கடவுளிடம் ஒப்புவிப்பதே வழியென்ற உணர்ச்சியும், கடவுளை வழிபடுதற்கு வேண்டிய அன்பும் மனக்கசிவும் உண்டாகத்தக்கன. இவைகளே எங்களை ஈடேற்றிக்கொள்ளுதற்கு மிக அவசியமான எண்ணங்களும் செய்கைகளுமாம். ஆதலால் எங்களுக்குத் திருநீற்றிலும் மேலான செல்வமும் பேறும் இல்லை. சிவனடியாரைக் காண்பதரிது. சிவாலயதரிசனம் நித்தியமுஞ் செய்வோர் மிக அரியர். எவர்களுக்கும் எக்காலமும் இலகுவிற் கிடைக்கத்தக்கது திருநீறு. ஆதலாற் கடவுளை அடைதற்குப் பெருந்துணையாயுள்ளது திருநீறே.

இது அன்போடு அணியப்பட்டால் ஆன்மாவை மெல்லமெல்ல ஆணவத்தினின்றும் நீக்கி நல்வினையைச் செய்வித்துத் தீவினையில் மனத்தை விடாமல் தடுக்கும். இது சிவபுண்ணியங்களைச் செய்வித்து ஞானத்தைப் பெறச்செய்து பழவினைகள் யாவற்றையும், தொலைப்பிக்கும். இது சிவமாந் தன்மையைக் கொடுப்பதாலும், செல்வங்களுள் மிக மேலானதாகிய ஞானத்தைக் கொடுத்தலாலும் விபூதியென்ற பெயர் பெறும். (வி-சிவபெருமான்; பூ-பாவனை; தி-கொடுப்பது. வி-மேலான; பூதி-செல்வம்.) இது மலமாகிய தடைகளை அறுப்பதினால் க்ஷாரம் எனவும், அருள் ஒளியிலே செலுத்திக் காத்தலால் ரட்சை எனவும், ஞானமாகிய தூய்மையைத் தருதலால் பசிதம் எனவும், சத்திபேதத்துக்குக் காரணமாய்ப் பழவினைகளை அழித்தலால் பஸ்மம் எனவும், பெயர்பெறுமென்று வேதசிரசாகிய பிருகத் ஜாபாலம் கூறும்.

இது ஆகமங்களில் உள்ள உண்மையை அடக்கியிருத்தலினாலே, "தந்திரமாவது நீறு" என்றும், வணங்கப்படவேண்டியதாதலால், "துதிக்கப்படுவது நீறு" என்றும், தியானிக்கப்படவேண்டிய தாதலாலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமாகிய மந்திரத்தின் உண்மையினை உடையதாதலாலும், "மந்திரமாவது நீறு" என்றும், இதைத் தியானித்து வணங்கின் முத்தி கிடைக்குமாதலால், "முத்தி தருவது நீறு" என்றும், திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளினர்.

திருநீற்றின் மூன்று குறிகளுள்: முதற்குறி பிரணவத்தின் அகாரத்தையும், கிரியாசத்தியையும், மகேசுவரனையும், இரண்டாவது குறி உகாரத்தையும், இச்சா சத்தியையும், சதாசிவனையும், மூன்றாவது குறி மகாரத்தையும் ஞானசத்தியையும், மகாதேவனையும் குறிக்குமென்று காலாக்கினிருத்ரோபநிஷத்திலே ஏழாம் எட்டாம் ஒன்பதாம் மந்திரங்கள் சொல்லுகின்றன. திருநீற்றைப் பரவப் பூசும்போது அது படிந்த ஒவ்வொரு மயிர்த்துவாரமும் ஒவ்வொரு சிவலிங்கமாகி மலத்தின் வலியைக் கெடுக்கும்.

திருநீறு பூசுவதனால் வரும் பேறானது பயன்படுதற்குக் கடவுட்பத்தி இன்றியமையாதது. திருநீறு உடல்போலவும், சிவபத்தி உயிர்போலவும் உள்ளன. உடலும் உயிரும் ஒன்றற்கொன்று அவசியமாதல் போலத் திருநீறும் சிவபத்தியும் ஒன்றிற்கொன்று அத்தியாவசியமாம். உத்தூளனமாகப் பூசும்போது, இந்தச் சிவபத்தியை எழுப்புதற்காகத் திருவைந்தெழுத்தையேனும், திருவோரெழுத்தாகிய "சிவ" என்னும் சொல்லையேனும் உச்சரிக்கவேண்டும். மூன்று குறியாக அணியும்போது தலை நெற்றி மார்பு கொப்பூழ் ஆகிய இடங்களில் அருளல் மறைத்தல் அழித்தல் காத்தல் ஆகிய செயல்களைச் செய்யும் திருவருள் பதிந்த ஈசான தற்புருஷ அகோர வாமதேவ மந்திரங்களையும், முழந்தாள்கள் புயங்கள் முழங்கைகள் மணிக்கட்டுகள் விலாப்புறங்கள் முதுகு கழுத்து ஆகிய பன்னிரண்டிடங்களிலும் படைத்தலைச் செய்யும் திருவருள் பதிந்த சத்தியோசாத மந்திரத்தையும் உச்சரிக்கவேண்டும். இதனால் இந்த இடங்களுக்கு அதிதேவ மூர்த்திகளாகிய சிவம் சத்தி சதாசிவன் மகேசுரன் உருத்திரன் வாமை முதலிய ஒன்பது சத்திகள் அசுவினிதேவரிருவர் ஆகியோர் திருவருள் காக்கும்.

இவ்வாறு மனமுருகக் கடவுளை நினைத்து வாக்கினாற் சிவமந்திரத்தை உச்சரித்துக் கையினாற் திருநீற்றைப் பூசும்போது மனம் வாக்கு காயமாகிய மூன்றினாலும் ஒரே காலத்திற் சிவபாவனையும் வழிபா

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நாங்கள் வேண்டுவது சுயவாட்சியே!

"பதவி ஆசை எமக்கு இல்லை"
விசேஷ உதவியைப் பிரிட்டன் உதறித் தள்ளுவதேன்?

பிரிட்டனுக்கு ராஜாஜி கூறும் யோசனை

தேசிய அரசாங்கத்தின் அவசியம்பற்றி ஸ்ரீ சத்தியமூர்த்தி

சென்னை ஜூலை 22

சென்னைப் பழைய பிரதமமந்திரி ஸ்ரீமான் ஸீ. இராஜகோபாலாச்சாரியார் அசோசியேற்றட் பிரசுக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கையிற் குறிப்பிட்டிருப்பதாவது:

நாம் கோரும் சுதந்திரத்தை அளிப்பதால் பிரிட்டிஷார் தேசப் பாதுகாப்புச் சம்பந்தமாகப் போட்டுள்ள திட்டத்துக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று நினைக்கவேண்டாம். சுதந்திரம் பெற்ற நிலையில் கட்டுப்பாடின்றி இந்தியா கலந்து உதவ அதனால் இடம் ஏற்படும். நிர்ப்பந்தப்படுத்தி உதவி பெறுவதைவிட இந்தியர் தாங்களாகவே உதவினால் விசேஷமல்லவா? அவ்வித உதவி பெறுவதற்கு அவர்கள் கோரும் சுதந்திரத்தை அளித்து விடுவதே சரியான வழி. இதைத்தான் நாம் அடிக்கடி சொல்லி வருகிறோம்.

காங்கிரஸ் காரியக்கமிட்டித் தீர்மானம் சம்பந்தமாக சிம்லாவிலுள்ள அதிகாரிகள் கொண்டுள்ள அபிப்பிராயத்தைப்பற்றி அடிக்கடி பத்திரிகை நிருபர்கள் எழுதி வருகிறார்கள். அவர்கள் எழுதுவதைக் கவனித்தால் சற்று அதிக சேவையுள்ள சிவிலியன்கள் காரியக் கமிட்டி [illegible] போல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடாதென்று பிரிட்டிஷாருக்கு யோசனை சொல்லி வருவதாகத் தெரிகிறது. அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். வேறு விதமாக அவர்கள் யோசனை கூறியிருந்தால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். தைரியமாக ஒரு காரியத்தைச் செய்ய அவர்கள் பயிற்சி பெறவேயில்லை. நிலைமைக்கேற்றபடி நடக்க அவர்கள் பழக்கப்படவில்லை.

பிரிட்டன் தவறான ஒருஎண்ணத்துடன் இந்தியா விஷயத்தைக் கவனித்து வருகிறது. அது என்ன சாபமோ தெரியவில்லை. அவர்கள் அனுஷ்டிக்கும் கெடுதலான ஒரு ராஜ தந்திரத்தால் இந்த நெருக்கடியான சமயத்திலும் இந்தியாவை இவ்விதம் நடத்துகிறார்கள்.

ஆத்மார்த்த உதவியும் மற்ற லௌகிக ஆதரவும் கிடைப்பதற்கு எவ்வளவோ வசதியிருந்தும், அவற்றை அநியாயமாகப் புறக்கணிப்பதால் தான் நான் இவ்விதம் இன்று பேசவேண்டியிருக்கிறது.

இப்போது கூட இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டாம் எனப் பிரிட்டனுக்கு யோசனை கூறப்படுவதானால், எவ்வித ஒப்பந்தமும் ஏற்பட முடியாது. இதில்லாமல் பிரிட்டிஷார் தங்கள் கொள்கையை எவ்விதம் வற்புறுத்திச் சொன்னாலும் பயன்படாது. உடனே காரியக் கமிட்டி குறிப்பிட்ட முறையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். இந்த நெருக்கடியிற் காலந் தாழ்த்தக் கூடாது.

யுத்தத்தின் பிரச்னை எதுவாகவிருந்தாலும் சரி, யுத்தம் எப்போது முடிவதானாலும் சரி, இந்தியா பிரிட்டனால் ஆளப்படும் ஒரு நாடு என்பதை அகற்றிவிட்டால், பிரிட்டனுக்கே நன்மையாகும். எப்படியும் சில வருஷங்களுக்கு மேல் இந்தியா இப்போதுள்ள அடிமை வாழ்வில் இருக்கப் போவதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்தரம் அளிக்கப் பிரிட்டன் மறுத்தால் எவ்வித சௌகரியமுமின்றி வீணான மனஸ்தாபத்தைத் தேடிக்கொள்வது தான் லாபமாகும், காங்கிரஸ் காரியக் கமிட்டி குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதால், பிரிட்டனுக்கு உடனே இந்தியாவின் உதவி கிடைக்கும்; இந்தியா புத்துயிர் பெற்றுச் சுதந்திரத்துடன் தானே முன்வந்து உதவும். யுத்த முடிவில் கொலனிகள் விஷயம் ஆலோசனைக்கு வருகையில் பிரிட்டனுக்கு எவ்வித அசௌகரியமுமிருக்காது.

நிருவாகிகளின் குறை

இந்தியாவில் தற்காப்புக்கான போதிய ஏற்பாடுகள் இதுவரை செய்யவில்லையானால் அதற்கு இதுவரை நிர்வாகம் நடத்தியவர்கள்தான் காரணம். அவர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்யவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கிய ஒவ்வொரு அம்சமும் அபாய காலத்தில் அதன் தற்காப்புக்கான ஏற்பாடுகளை அதுவே செய்து கொள்ளக் கூடிய நிலையை ஏற்படுத்தி வைக்கவேண்டியது பிரிட்டனின் கடமையாகும். அந்நிய உதவியை எதிர்பார்க்கும் நிலையில் அவற்றை விடக்கூடாது; பிரிட்டன் இந்தியா விஷயமாக அனுஷ்டிக்கும் கொள்கை அவநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக விருப்பதால், பிரிட்டிஷார் இந்தியாவைத் தர்மச் சொத்தாகப் பாவித்து நடத்த மேற்கொண்ட கொள்கையினின்று தவறிவிட்டதாகவே பலரும் கருதுகிறார்கள். அரசாங்க இராணுவம் சம்பந்தமாக அனுஷ்டிக்கும் கொள்கை மட்டும் சரியாகவிருக்கிறது. அவர்கள் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷாருக்கு உள்நாட்டுக் குழப்பத்தால் கஷ்டம் ஏற்படாமலிருக்கமட்டும் வழி தேடிக் கொண்டார்கள்; மற்றக்காரியங்களுக்கு அது எவ்விதத்திலும் பிரயோசனப்படவில்லை. இந்திய மஹாஜனங்கள் அனைவரும் திக்கற்ற நிலையில் இருக்க அவர்கள் விட்டுவிட்டார்கள். ஆகவே, இந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியர் நிருவாகத்தை மாற்றும்படி கேட்க உரிமை பெற்றிருக்கிறார்கள்; அதனால் தான் தேசிய அரசாங்கம் உடனே அமைக்கப்பட வேண்டுமென இந்தியர்கள் கேட்கிறார்கள்,

நாம் கோரும் சுதந்திரத்தின் பயனாகப் பிரிட்டிஷார் தேசப்பாதுகாப்புக்காகப் போட்டுள்ள திட்டத்துக்கு எவ்வித குந்தகமும் நேராது. சுதந்திர முறையில் தாராளமாக அப்போது பிரிட்டனுக்கு இந்தியாவின் உதவி கிடைக்கும். அவ்வளவுதான். பலவந்தத்தாற் கிடைக்கும் ஓர் உதவியை விட இவ்விதம் மனப்பூர்வமாகக் கிடைக்கும் உதவி சிறந்ததல்லவா? நாம் ஆதிமுதல் "இந்தப் பலவந்தம் வேண்டாம். மனப்பூர்வமாக நாங்கள் உதவுவதற்கான வசதி அளியுங்கள்" என்றே கேட்டு வருகிறோம்.

இந்த நெருக்கடியில், முஸ்லீம்கள் பூச்சாண்டியையோ, தாழ்ந்த வகுப்பினர் பிரச்னையையோ, இந்திய சமஸ்தானங்களின் விவகாரங்களையோ [illegible] விஷயத்தையோ கிளப்புவதிற் பயனில்லை. பிரிட்டனும் இந்தியாவும் ஒன்றுபட்டு உழைக்க முற்பட்டு இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டு விட்டால், அதற்காக அவர்கள் எதிர்க்கட்சியிற் சேர்ந்து கொள்ளப்போவதில்லை.

கலப்புக் கூடாது

மத்திய அரசாங்கத்தில் தேசிய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களில் பொறுப்பாட்சியும் நடக்கலாம். இப்போது ராஜீய விஷயத்தில் நேர் மாறான கொள்கையை உடைய பிரிட்டிஷாரையும் நிரந்தரமாகச் சேவையில் வைத்துக் கொண்டு காரியம் நடத்தி வரலாம். ஆனால், அரசாங்கத்தின் பொறுப்பை மேற்கொள்ள நிரந்தர சிவில்காரர்களுக்கிடையிலும் பொதுஜனப் பிரதிநிதிகளுக்கிடையிலும் பங்கிட்டுக் கொடுத்தால் காரியம் நடக்காது.

இராஜப்பிரதிநிதி நிருவாக சபையில் அநுபவம் மிகவுடைய அங்கத்தினர்களின் உதவி இப்போது நன்மைதான். ஆனால், கலப்பு நிருவாக சபையில் அநுபவம் மிகவுடைய அங்கத்தினர்களின் உதவி இப்போது நன்மைதான். ஆனால், கலப்பு நிருவாகசபை ஏற்படுத்துவதால் எப்போதும் சச்சரவும் கருத்து வேறுபாடுகளும் இருக்கும். பொறுப்பைச் சரிவர நிர்வகிக்கவும் முடியாது.

இந்தியர் பதவிகள் பெற இப்போது மோகங்கொண்டிருக்கவில்லை. சுயவாட்சி வேண்டுமென்றே அவர்கள் கேட்கிறார்கள். இதுவிஷயத்தில் காங்கிரஸ் கொள்கையைப் பூரணமாக அங்கீகரிக்காதவர்களும் ஒன்றுபட்ட அபிப்பிராயமே கொண்டிருக்கிறார்கள்.

சமஸ்தான விஷயம்

சமஸ்தான விஷயத்தைத் தற்சமயம் சற்று ஒதுக்கி வைக்க வேண்டும்.

சமஸ்தானாதிபதிகள் இப்போது தங்களுக்குச் சர்வாதிகார பீடமாக விளங்குபவருக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆதரவு புரிந்துவருகிறார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் மாகாணங்களிலும் தேசிய அரசாங்கம் ஏற்பட்டு விட்டால், சமஸ்தானங்களைப் பொறுத்த விஷயத்தில் எவ்வித கஷ்டமுமிருக்காது. தேசப் பாதுகாப்பு விஷயமாகச் சமஸ்தானங்களுக்கும், தேசிய அரசாங்கத்துக்கும் கருத்து வேறுபாடு நேரக்காரணமில்லை. சீக்கிரத்தில் முக்கிய விஷயங்கள் பல ஒரு விதமாகச் சீர்ப்படுவதற்கும் இடமேற்படும்.

யுத்தத்துக்குப் பின் குடியேற்ற நாட்டு அந்தஸ்தின் பயன்களைப் பற்றிய பழைய கொள்கையும் உபயோகப்படாது. திட்டமாக இப்போது இந்தியாவின் சுதந்தரத்தை அங்கீகரிப்பதுதான் நியாயமான வழியாகும். இந்த விஷயத்தை விளக்கமாக அறிவிக்குமுன் காங்கிரஸும் மற்ற எந்தப் பொது ஸ்தாபனமும் சரி, தியாகம் செய்யும்படி நாட்டிலுள்ள பலரையும் கேட்டுக் கொள்ள முடியாது. பிரிட்டன் நிறைவேற்ற வேண்டிய கடமையை

தொடர்ச்சி 3-ம் பக்கம்

அம்மையார் சுரந்தளித்த
திருமுலைப்பாலைத் தாம் அருந்திய
வரலாற்றை அறிவுறுத்தும்

ஆளுடையபிள்ளையின் அருட்பாட்டு

(வேலணைகிழார் வேந்தனார்)

ஆளுடைய பிள்ளையெனுந் திருஞான சம்பந்த அடிகளார், தமக்கு உமையம்மையார் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினார் என்றும், தமது தந்தையாராகிய சிவபாத விருதயர் அஃதுணராமற் றம்மை வெகுண்டு வினவியபோது இறைவனையும் இறைவியையுஞ் சுட்டிக்காட்டினாரென்றும், "தோடுடைய" என்னும் திருப்பதிகத்தில் ஓதிற்றிலராதலின் அம்மையார் திருமுலைப்பாலைச் சுரந்தளித்து ஆளுடைய பிள்ளையாரை ஆட்கொண்ட வரலாற்றை அப்பிள்ளையார் தாம் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களில் யாங்காயினும் திருவாய் மலர்ந்திருக்கின்றனரா? என வெம்மைநண்பரொருவர் வினவினர்.

இங்ஙன் நண்பர் வினவ வினாவுக்கு விடைவிறுப்பான் வேண்டித் திருஞானசம்பந்த அடிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருமுறையினைக் கருத்தூன்றிப் படித்து வருகின்றுழி, "மண்ணினல்ல வண்ணம்" [illegible] பிரமபுரத் திருப்பதிகத்தில் வருமொரு திருப்பாட்டின்கண் அம்மையார் சுரந்தளித்த திருமுலைப்பாலைத் தாம் அருந்திய வரலாற்றை அறிவுறுத்திச்செல்லும் ஆளுடையபிள்ளையின் அருள்நலத்தைக் கண்டனம். கண்டதும் பெரியதோர் காதலகளி கூர்ந்து நண்பரிடம் சென்று நாம் பெற்ற இன்பம் அவரும் பெறுமாறு நற்றமிழ் நலனும் நல்லருள் நலனும் ஒருசேரப் பொதுளி ஓதுவாருள்ளத்தின்கண் உலையாத பேரின்பத்தை ஊறச் செய்து நிற்கும் அத்திருப்பாட்டைப் படித்துக்காட்டி ஒரு பேருவகை எய்தினேமாதலின் செந்தமிழ்ச் சிவநெறி அன்பர் உலகுக்கும் அத்திருப்பாட்டை அறிவுறுத்தி ஆர்வமெய்துவேம் என்ற கருத்துடன பாட்டும் உரையுமாக வெளியிடுகின்றேம்.

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே."

என்பது பாட்டு. இதன்கண் அடிகளார் தாமே தமக்கு இறைவன் செய்த அருள்நலப் பாட்டினைக் கிளர்த்தெடுத்துரைக்கின்றார்.

உரை

போதையார் பொற்கிண்ணத்து அடிசில்—இதழ்விரிந்த தாமரை மலரைப் போல வாயகன்ற செவ்வே விளங்கும் பொன் வள்ளத்தில உமையம்மை கறந்தூட்டிய கொழும்பாலுணவை; தாதையார் பொல்லாது என முனிவுற—சிவபாத விருதயர் என்னுந் தந்தையார் இழிந்தாள் ஒருத்தி தந்த எச்சிலாதலின் அது துய்த்தல் தீதென்றுரைத்து வெகுள; தான் என்னை ஆண்டவன்—தான் தன் திருவருளினாலே விரும்பி வந்து என்னை ஆண்டுகொண்டான்; அங்ஙனம் ஆண்டுகொண்ட இறைவன் திருவடையாளங்கள் யாவையோ எனின்:—காதையார் குழையினன்—காதிற் செறிய இடப்பட்ட வெண்டோடு உடையனும்; அதுவன்றியும், பேதையாள் அவளொடும்—தான் அறிவொளியாயிருந்தே உலகத்துப் பெண்டிர்க்கெல்லாம் அறியாமை கற்பித்தல் வேண்டியவளின் தானும் அறியாமையுடையாள் போற் றோன்றும் உமையம்மையுடன் பிரிவறக் கலந்து; பெருந்தகை—சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடையராகிய உயிர்களைப்போலாது அவற்றையெல்லாந் தன்னகப்படுத்து வரையறையின்றி விரிந்து செல்லும் பரந்த உணர்ச்சியும் முழுமுதலாற்றலும் உடையனாகிய காரணத்தினாலே பெருந்தகையாய் விளங்கும் முழுமுதல்வனான சிவபெருமான்; இருந்தது—உயிர்கள் தன்னை வழிபட்டு உய்யும் பொருட்டுத் தானே தன பெருமைக் குணங்களைச் சுருக்கிக்கொண்டு அருளே திருவுருவமாய் எழுந்தருளி இருந்த திருநகரம்; கழுமல வளநகர்—தன்னை வந்தடைந்த உயிர்களின் மும்மலங் கழுவித் தூய்மை செய்கின்ற ஒரு பெருங் காரணத்தாலே 'கழுமலம்' என்ற பெயர்பெற்ற வளமிய நகரமாம். எ—று.

போதை என்பதில் ஐகாரம், "குறவரையார்க்குங் குளிர்மலை நாட" எனுந் திருச்சிற்றம்பலக் கோவையாரிற்போலவந்த சாரியை, 'ஆர்' என்பது "செப்புற்ற கொங்கை" "தோளுற்றேர்தெய்வம்" என்னுந் திருக்கோவையார் சிந்தாமணியிற்போல உவமவுருபின் பொருள்பட வந்த உவமச் சொல்; மாறுபட்ட பொன் செவ்வென்று பொலிதலானும் வள்ளம் வாயகன்ற வட்டமாய் இருத்தலானும் உவமை வண்ணமும் வடிவும் விராய்வந்தது. இவ்வாறே "பாண்டிலெடுத்த பஃறாமரை கீழும் பழனங்களே" என்று திருக்கோவையாரினும் போந்தது காண்க: ஆசிரியர் நச்சினார்க்கினியரும் "பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்புழி வண்ணமும் வடிவும் விராய்வந்த உவமையென்றுரைத்திட்டார். அறியாமை யென்பது பெண்மைக்குணம் நான்கனுள் ஒன்றாகும். அதுதானொரு பொருட்டன்மை அறிந்தும் அறியாதது போல ஒழுகுதல், ஆசிரியர் நக்கீரனாரும், மடமென்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை யென்றனர் கூறினர். கழுமல வளநகர்—சீகாழி. பிள்ளையார் தமக்கு அருள்தரும்பொருட்டு இறைவன் தாங்கிவந்த அருட் கோலத்தின்கண் குழையிடப்பட்ட திருச்செவியைச் சுட்டித் "தோடுடைய செவியன்" என்று பதிகந் [illegible] யிட்டருளியவாறு போலவே ஈண்டுங் "காதையார் குழையினன்" என்று குறிப்புரைத்தருளினார். தந்தையார் தம்மை வெகுண்டு ஒறுத்துவிடுவாரோ வென்று தாம் அஞ்சி அலமருமெல்லைக்கண் தம் மாட்டுக் கொண்ட பேரருட் டிறத்தினால் வானத்தின்கண் திருவருட் கோலத்துடன் எழுந்தருளித் தம்மை ஆண்டுகொண்டு தம்மது தந்தையாரின் முனிவையும் நீக்குவித்த அருமை தோன்றத் "தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்" என்றார். அம்மையும் அப்பனுமாய் வெளிவந்து தம்மை ஆண்டனரென்பார். "பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே" என்றார். இங்ஙன் தம்மையாண்டுகொண்ட அம்மையையும் அப்பனையும் கழுமலவளநகரிற் கண்டேன் என மகிழ்ந்ததமையான மெய்ப்பாடு, உவகை. (புலன்) அறிவு நிலைக் களமாகத் தோன்றியது. பயன், பிறவிப்பிணியொழித்து வீடடைதல்.

எனவே இத்திருப்பாட்டின்கண் ஆளுடைய பிள்ளை தாம் அம்மையார் சுரந்தளித்த திருமுலைப்பாலை அருந்திய அருள் வரலாற்றை ஐயந்திரிபற அருளிப்போகும் அருமையை அறிகின்றோம். இவ்வாறே திருத்தொண்டர் வரலாற்றிற் கூறப்படும் தொண்டர் சிலரின் [illegible] காணப்படும் திருவருட் செயல்களெல்லாம் தம்மனம் சென்றவாறே திரிபுடைய முடிவுகளைப் படைத்துக்கொண்டுழலும் இஞ்ஞான்றை ஆய்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ௵ ஆடி௴ ௧௪௳ திங்கட்கிழமை

பொருந்தா நியாயம்

இவ் விலங்கையிலுள்ள மக்களின் நித்திய சீவியத்திற்கு இன்றியமையாத பொருள்கள் பல அந்நிய நாடுகளிலிருந்தே இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன வென்பது எவர்க்கும் விளங்கும். அரசியலுக்குரிய செலவு அதிகப்பட வருவாய் குறைந்தமையினுற் சில பொருள்களின் துறைமுக வரியை முந்தி இருந்ததைக் காட்டிலும் உயர்த்தி அறவிட வேண்டுமென்ற நோக்கம் அதிகாரிகளிடத்தில் இந்த நேரத்தில் உண்டாயிருக்கின்றது. இப்படிச் செய்வதனுல், யுத்தங்காரணமாகப் பணப் பஞ்சம் பண்டப் பஞ்சம் நேர்ந்துள்ள இந்த வேளையிற் சனங்கள் கஷ்டப்பட வேண்டியே நேருமென்பது நிசம். இருந்தாலும் ஊரவர்கள் அதிகாரிகள் செய்வதைக் கண்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதே முறை. ஊரிலே பயிரிடுந் தொழில், கைத்தொழில் கமத்தொழில் என்னுமிவைகளைச் சனங்கள் செய்து சீவிப்பதற்கு அதிகாரிகளாகிய தாம் எவ்வகையானுந் துணைபுரிதலின்றி, இந்த ஊர [illegible] வரும் பயனில் ஏதும் கிள்ளிக் கொள்ளுவ தின்றி அள்ளிக் கொள்வதே எங்கள் அதிகாரிகளின் பரிபாலன முறையாக வந்து விட்டது. உண்மையைச் சொல்லி உள்ளபடி நடப்பதனுல் வருங் கெடுதி யாதுமில்லை.

இதைவிடுத்து, இந்த அதிகாரிகள் இங்கு இறக்குமதியாகும் அரிசிக்குச் சுங்கவரியை உயர்த்தும் விஷயத்தில், அந்நிய நாட்டிலிருந்து இங்கு வந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி நெல் என்னுமிவைகளின் சுங்கவரியை உயர்த்தினுற்றான், இங்குள்ள மக்கள் ஊக்கத்தோடு பயிரிடுந் தொழிலைச் செய்து விருத்தி யடைவார்கள், இதை உத்தேசித்துத்தான் அரிசியிறக்குமதி வரியை உயர்த்தியறவிட யோசிக்கிறதாக அதிகாரிகள் இந்த நேரத்தில் நியாயஞ் சொன்னுல் அந்த ஞாயம் பொருந்துமா? உணவுப் பொருளுக்குத் தீர்வையை உயர்த்துவதற்கு இதுதானு சந்தர்ப்பம்?

இங்கு இறக்குமதியாகுஞ் சீனி சர்க்கரை கற்கண்டு என்னும் இவைகளின் சுங்கவரியை இன்னமும் அதிகமாக விதிக்க வேண்டுமென, அரசாங்க சபைக் கூட்டத்தில் அரசியற் பரிபாலனச் செலவுத் திட்ட விஷயமாக, சேர் பரன் ஜெயதிலகை சென்ற வாரம் பேசிய போது, சீனி முதலிய இனிப்புப் பண்டங்களின் சுங்கவரியை இந்தச் சமயத்தில் தாங்கள் உயர்த்துவதனுல், இங்குள்ள பனங்கட்டி முதலிய இனிப்புப் பண்டங்களை ஊரவர்கள் விருத்தி செய்வார்கள், அப்படிச் செய்தால், அந்நியநாட்டுச் சீனி இங்கு இறக்குமதியாகுதல் குறைந்து விடு மென்று நியாயஞ் சொன்னுர். இந்த மந்திரியின் நியாயம் இருந்தபடியென்னே? அரசியல் வருவாய் போதாமையினுற் சீனியின் சுங்கவரியை உயர்த்த வேண்டுமென்ற பிரேரணைக்கு ஆதாரமாகப் பேசியவர், பனங்கட்டித் தொழில் இங்கே விருத்தியானுல் அந்நியநாட்டுச் சீனி இங்கு இறக்குமதி குறைவாகுமென்கிருர். சீனி இங்கு வந்து இறக்குமதி செய்யப் படுதல் குறைந்துபோக, இறக்குமதி குறைந்தபின் சீனிக்குச் சுங்க வரியை ஏற்றியாவ தென்ன? இறக்கப்படுதல் குறைந்த பொருளுக்கு, இறக்குமதி இல்லாத பொருளுக்குச் சுங்கவரியை அதிகப்பட விதித்தலினுல் அரசிறை வருவாய் அதிகப்படுமெனக்காத்திருத்தல் அசம்பாவிதமல்லவா? பனங்கட்டியை, தித்தி வெல்லத்தை, கல்லக்காரமென வழங்கும் பனங்கற்கண்டை இக்காட்டிலே விருத்தி செய்வதற்கு இந்த அதிகாரிகள் இற்றைவரையில் ஏதும் உதவி செய்ததுண்டா? இற்றைக்கு 25 வருடங்கட்கு முன் யாழ்ப்பாணத்துள்ள வடமராட்சிப் பகுதியில் தாபிக்கப்பட்டு, சிலகாலம் நடைபெற்ற சீனிக் கைத்தொழிற் சாலைக்கு நமது அரசினர் அந்த நேரத்தில் ஏதும் உதவி செய்திருந்தால், இப்பொழுது சீனியையிட்டு இங்குள்ளார் பஞ்சப்படவேண்டி நேரமாட்டாரதே? நமது அதிகாரிகள் தாமுஞ் செய்யார், செய்பவர்க்குத் துணை புரியார், அந்நிய நாட்டிலிருந்து வந்து இறக்குமதிசெய்யப்படும் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்கண்மீது தாங்கொணு வரியை விதித்துவிட்டுப் போலியான நியாயமுஞ் சொல்லத் துணிந்தால் இது பொருந்துமா? "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்"

"சுகாதாரக்கும்மி"

சுகாதாரத்தைப் பற்றி விளக்கும் இச்சிறிய நூலைப்பாடியவர் நவாலியூர் திரு. க. சோமசுந்தரப்புலவரவர். இது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரின் 52-ம்பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலைப் பற்றிய அபிப்பிராயத்தை முந்திய இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம். இப்புத்தகம் இலங்கையிலுள்ள தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் 5 வருடகாலத்திற்கு உபயோகிக்கப்படலாமென இலங்கை வித்தியாதிகாரியா [illegible] இந்த யூலாய்௴ 23-ந்தேதி அங்கீகாரக்கடிதம் வெளியிட்டுள்ளார். பிரதி யொன்றன் விலை சதம் 10. பெற விரும்புவோர் இந்துசாதனபத்திரிகையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாகும்.

மாவிட்டபுரம் தேர்தீர்த்தத்திருவிழாக்கள்

வருகிற வெள்ளிக்கிழமை (2-8-40) மாவிட்டபுரக் கந்தசாமி கோயிலிற் பஞ்சரதோற்சவமும், அடுத்தநாளாகிய ஆடியமாவாசைப் புண்ணிய தினத்தன்று கீரிமலைச் சமுத்திர சங்கம தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ஐக்கிய அமெரிக்காவிற் கட்டாய இராணுவ சேவை

வாஷிங்டன் ஜூலை 23

ஐக்கிய அமெரிக்காவிற் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு வசதியளிக்கும் ஒரு சட்டத்தை செனட் இராணுவக் கொம்மிற்றி அங்கீகரித்துவிட்டது. இந்தச் சட்டத்தின்படி கட்டாய இராணுவப் பயிற்சிக்காக 18 வயசுக்கும் 64 வயசுக்குமிடையிலுள்ள 420 லக்ஷம்பேர் பதிவு செய்யப்படுவோர்கள். இந்தச் சட்டம் அடுத்தவாரம் செனட் சபையிற் பிரேரிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டத்திற் கூறப்பட்டுள்ள உத்தேசத்தின்படி முதல்வருஷத்தில் 21 வயசுக்கும் 30 வயசுக்குமிடையிலுள்ள ஏறக்குறைய 150 லக்ஷம் பேர்களுக்கே பயிற்சியளிக்கப்படுமென்று யுத்த இலாகாவைச் சேர்ந்த ஓர் உயர்தர அதிகாரி கூறினுர்.

ஹாலிபாக்ஸ் பேச்சுப்பற்றி அமெரிக்கர் கருத்து

நியூயோர்க் ஜூலை 23

"ஹிட்லரின் போலிச்சமாதானக் கோரிக்கையை ஹாலிபாக்ஸ் பிரபு நிராகரித்து விட்டார்" என நியூயோர்க் பத்திரிகைகள் அனைத்தும் தலையங்கக் குறிப்புக்களை எழுதியிருக்கின்றன. சுதந்திரத்தைப் பெறும்வரை யுத்தத்தை நடத்த பிரிட்டன் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை என்றும் அவைகள் கூறுகின்றன.

ஹாலிபாக்ஸ் பிரபுவின் பிரசங்கம் ஆஸ்திரேலியாவிற் பொதுவாக வரவேற்கப்படுகிறது.

நீதியை அடிப்படையாகக் கொண்ட சமாதானக் கோரிக்கையை ஹிட்லர் விடுத்திராததால் ஹாலிபாக்ஸ் பிரபு அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டாரென "நியூயோர்க் ரைம்ஸ்" எழுதுகிறது.

சுப்பிறீங்கோடு

வட்டுக்கோட்டைக் கொலை எத்தன வழக்கு

விவாகரத்து வழக்கின் விளைவா?

விசாரணை நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், 25-7-40

வட்டுக்கோட்டை மேற்கில் வசிக்கும் மலாய்நாட்டுப் பென்ஷனராகிய சபாபதிப்பிள்ளை-எதிர்நாயகமென்பவரும் அவ்வூரில் வசிப்பவரும் மூளாய்ப்பாடசாலையில் உபாத்தியாயருமாகிய சண்முகம் விஞசித்தம்பி என்பவருமாக அவ்வூர்ச் சரவணமுத்து கணபதிப்பிள்ளைக்குப் பொல்லாலடித்துக் கொலைசெய்ய எத்தனித்ததாயும் ஆறுமுகம்-கதிரவேலுப்பிள்ளைக்கும் ஆறுமுகம்-சின்னத்துரைக்கும் பொல்லாலடித்துச் சாதாரண காயம் வருவித்ததாயும் இரண்டாம் எதிரி கணபதிப்பிள்ளை பரமசிவம்என்பவருக்குச் சாதாரண காயம் வருவித்ததாயும் குற்றஞ்சாட்டிய வழக்குச் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கதிரவேற்பிள்ளை கந்தசாமி சாக்ஷியம் கூறியவற்றின் சாராம்சமாவது:-

நான் காயக்காரனின் மருமகன். காயக்காரன் கணபதிப்பிள்ளை என்னுடைய தகப்பனுரின் சகோதரியை விவாகம் செய்தவர். கணபதிப்பிள்ளைக்குத் தற்பரானந்தம், பரமசிவம் என இரண்டு மக்களுண்டு. தற்பரானந்தம் சண்முகத்தின் மகளும் இரண்டாம் எதிரியின் சகோதரியுமாகிய பெண்ணை விவாகம்செய்தார். முதலாம் எதிரி இரண்டாம் எதிரியின் வேறொரு சகோதரியை விவாகம் செய்தவர். சென்ற 3 அல்லது 4 வருஷகாலமாகத் தற்பரானந்தம் தமது மனைவியை விட்டுப் பிரிந்தார். அவர்மீது மனைவியார் தாபரிப்பு வழக்கு வைத்திருந்தார். அவ்வழக்கில தற்பரானந்தம் மனைவியாருக்கு ரூபா 20 கொடுக்கவேண்டுமென கட்டளையிடப்பட்டார். பின்னர்த் தற்பரானந்தம் அத் தொகையைக் கட்டமுடியாதென்றும் அத்தொகை [illegible] யைக் கொடுக்கும்படி தனக்கு கட்டளை செய்யவேண்டு மென்று கோட்டாரைக்கேட்டு ஒரு மனுவை அனுப்பியிருந்தார். இந்த மனுவைக் கோட்டார் ஆலோசனை செய்தபின்னர் முன்னர்க் குறித்த தொகையிலும் ரூபா 10 குறைத்துக் கட்டும்படி கட்டளையிடப்பட்டார். இச்சம்பவத்தன்றுதான் குறைத்துக் கட்டும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. எதிரிகள் இருவரும் வெவ்வேறு வீட்டில வசிக்கிறார்கள். முதலாம் எதிரியின் வீடு இரண்டாம் எதிரியின் வீட்டிற்கு ஒருவளவுக்கப்பால் இருக்கிறது. இச் சம்பவதன்று நான் தற்பரானந்தத்தை எதிரிகளுடைய வீட்டடியில் முதன்முறை கண்டு கதைத்தபின்னர்ப் பத்து நிமிஷத்தின் பின் தற்பரானந்தம் கட்டப்பட்டு இழுக்கப்பட்டதைக் கண்டேன். அப்போது தற்பரானந்தம் "ஐயோ அவர்கள் என்னைக் கொல்லுகிருர்கள்" என்று கதறின சத்தம் கேட்டது. நான் எனது வீட்டைநோக்கிச் சென்றேன். இந்தச் சத்தம் கேட்டதும் நான் அவ்விடத்திற்கு ஓடினேன். எதிரிகள் இருவரும் தற்பரானந்தத்தை ஒழுங்கையிலிருந்து முதலாம் எதிரியின் வளவுக்குள் இழுத்துச் சென்றனர். நான் இதனைக் கண்டதும் தற்பரானந்தத்தின் தகப்பனுர் சரவணமுத்து-கணபதிப் பிள்ளை வீட்டிற்குச் சென்று அவருக்கு அறிவித்தேன். கணபதிப்பிள்ளை வீட்டிற்குப் போனபோது நான் என்னுடைய வீட்டிற்குப் போகவில்லை. கணபதிப்பிள்ளைக்கு நான் அறிவித்ததும், கணபதிப்பிள்ளையும் நானுமாக அவ்விடத்திற்குப் போக வெளிக்கிட்டோம். அப்போது நான் ஒரு அரிக்கன்லாம்பை எடுத்துக்கொண்டு சென்றேன். நாங்கள் இருவரும் வழியிற் கணபதிப்பிள்ளையின் மகன் பரமசிவத்தைக் கண்டோம். அவருக்கு நடந்ததைக் கூறினேம். அவரும் எங்களோடு கூடிக்கொண்டு வந்தார். நாங்கள் மூவரும் போகும்போது வழியில் நான் எனது வீட்டிற்குச் சென்றேன். மற்றவர்கள் மெல்ல மெல்லச் சென்றுர்கள். நான் வீட்டிற்குச் சென்றதும் என்னுடைய தகப்பனுர் கதிரவேற்பிள்ளைக்கும் எனது சிறிய தகப்பனுர் சின்னத்துரைக்கும் இதனை அறிவித்தேன். இதன் பின்னர், நான் விரைவாக நடந்து சென்று கணபதிப்பிள்ளையையும் பரமசிவத்தையும் சந்தித்தேன். அப்போது எனது கையில் விளக்கு இருந்தது. நான் 1ம் எதிரியின் படலையடியிற் சென்று 6 அல்லது 7 நிமிஷத்திற்குப் பின்னர் அங்கே எனது தகப்பனுரையும் சிறிய தகப்பனுரையும் கண்டேன். கணபதிப்பிள்ளை தனது மகன் தற்பரானந்தத்தை இரண்டு முறை பெயரைச்சொல்லிக் கூப்பிட்டார். அவர் படலையடியில்நின்று கூப்பிட்டார். அப்போது தற்பரானந்தம் "ஓம்" என்று தகப்பன் கூப்பிட்டதற்குப் பதிலளித்தார். அப்போது கணபதிப்பிள்ளை முதலாம் எதிரியின் படலையில் நின்று "இப்படி ஏன் என்னுடைய மகனுக்குச் செய்கிருய்" என்று கேட்டார். முதலாம் எதிரி அந்தநேரத்தில படலையடியில் நின்றுர். இதற்கிடையில் இரண்டாம் எதிரியும் அங்கு வந்து விட்டார். முதலாம் இரண்டாம் எதிரிகளையும்விட முதலாம் எதிரியின் பிள்ளைகளும் முதலாம் எதிரியின் வளவுக்குள் நின்றனர். முதலாம் எதிரி அங்கு வந்ததும் ஒன்றும் பேசாது நான் விளக்கை வைத்திருந்த கைக்கு ஒரு பொல்லால் அடித்தார். விளக்கு நிலத்தில் விழுந்து உடைந்து விட்டது. பின்னர் முதலாம் எதிரி பொல்லாலும் இரண்டாமெதிரி கைகளாலுமாகக் கதிரவேலுவுக்கு அடித்தனர். மூன்றும் முறை முதலாம் எதிரி கணபதிப்பிள்ளைக்கும் ஒருபொல்லாலடித்தார். கதிரவேலுவும் கணபதிப்பிள்ளையும் நிலத்தில் விழுந்து விட்டனர். நான் பயந்து பின்னுக்குச் சென்று நின்றேன். பரமசிவம் அங்கு ஒன்றும் செய்ததை நான் காணவில்லை. ஆனுல், நிலத்தில் விழுந்து கிடந்ததைக் கண்டேன். இவை எல்லாம் ஒரு பத்து நிமிஷத்தில் நடந்து முடிந்து விட்டன. அனேகர் வந்து அவ்விடத்திற் கூடினர். விதானையாருக்கு இச்சம்பவம் அறிவிக்கப்பட்டது. பொலிசாரும் அங்கு வந்தனர். காயக்காரர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இரண்டாம் எதிரிக்கும் காயம் ஏற்பட்டதென ஆஸ்பத்திரியில் நான் அறிந்தேன். பொலிசாருக்கு அடுத்த நாள் எனது வாய்முறைப்பாட்டைக் கூறினேன். நான் குடிக்கிறதில்லை.

(விசாரணை நடைபெறுகிறது)

க. கி.

சுப்பிறீம் கோடு

அராலிக் கொலை எத்தன வழக்கு

1ம் எதிரிக்கு 7 வருஷம்
2ம் எதிரிக்கு 6 மாதம்

25-7-40

அராலியில் வசிக்கும் குழந்தையன்-பொன்னனும், சின்னப்பொடியன்-குழந்தையனுமாகிய இருவருள் முதலாம் எதிரி அவ்வூர்க் கட்டையன் ஆறுமுகத்தானுக்கு ஒரு கோப்பிக் கத்தியால் நெஞ்சிற் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாயும் இரண்டாம் எதிரி இதற்கு உதவி புரிந்ததாயும் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் யூரிமார் முதலாம் எதிரியைக் கைகலப்பாடாய்க் கொலை செய்ய எத்தனித்ததாகிய குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியெனவும் இரண்டாம் எதிரி சாதாரண காயம் வருவித்ததற்கு முதலாம் எதிரிக்கு உதவி புரிந்ததாகிய குற்றச்சாட்டிற்குக் குற்றவாளியெனக் காண்பதாயும் கூறினர். நீதியாசர் முதலாம் எதிரிக்கு ஏழுவருஷக் கடுங்காவற் றண்டனையும் இரண்டாம் எதிரிக்கு ஆறு மாதக் கடுங்காவற் றண்டனையும் விதித்தார். க.கி.

வைஸ்ராயின் யுத்த நிதி

ஸிம்லா ஜூலை 24

வைஸ்ராயின் யுத்தநிதி இப்பொழுது 7,60,000 பவுணுக்கும் மேலாக வசூலாய்விட்டது. ஒரு புகைரதப் 'போட்டர்' கொடுக்கும் 4 அணுச் சந்தாவிலிருந்து ஹைதராபாத் 'ஜாம்' மாதந்தோறும் 11,000 பவுணுக்கும் கூடுதலாகக்கொடுக்கும் நன்கொடைகள் உட்படச் சகல பகுதிகளிலிருந்தும் குறித்த நிதிக்கு ஏராளமான பணம் வசூலாக வருகிறது.

அரிமா நோக்கு

"அரசன்" வரைவது.

தமிழ் இலக்கணநூலார் சூத்திரங்களின் கிடக்கையைப் பற்றிக் கூறுமிடத்து, அவை ஆற்றொழுக்குப் போலவும், அரிமா நோக்குப் போலவும், தவளைப் பாய்த்துப் போலவும், பருந்தின் வீழ்ச்சிபோலவும் நான்குவகையாகக் கிடக்கும் என்று கூறுவர். அவற்றுள், அரிமா நோக்கென்பது முன்னேயையும் பின்னேயையும் நோக்குஞ் சிங்க நோக்கம் என்றும் கூறுவர். இதிலுள்ள புதினக் குறிப்புக்களும் சிங்கநோக்காக எதிரெதிர் நோக்கப் பெறப்பட்டமையால் "அரிமா நோக்கு" என்னும் பெயர் இதற்கிடப்பட்டது.

செலவு வரவுத் திட்டம்

இப்பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இதில் ஏதோபிழை இருக்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்! அப்படியல்லவா? வரவு செலவுத் திட்டம் என்று வழக்கில் இருக்க, "நீயென்ன செலவு வரவுத் திட்டம் என்கின்றீரே. வழக்கறியாதவரோ நீர்? அல்லது உமது அரிமா நோக்கும்போது எதிரெதிராக நோக்குவது போலச் சொற்களையும் எதிர்மாருக நிறுத்திப் பார்க்கின்றீரோ" என்று கேட்கின்றீர்கள். அப்படியல்ல. வரவு செலவுத்திட்டம் என்பது வரவினங்களுக்குத் தகுந்த வாறு செலவினங்களை வகுக்கப்படுவதையே பழங்காலத்திற் கருதி வந்தது. ஆயின், இப்போதோ இலங்கை அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்பட்டு, சங்கேதப்படி பாலபா ஒற்றுமையோடு விவாதிக்கப்பட்டு, நிச்சலனமாக நிறைவேற்றப்படும் அந்தத் திட்டம் செலவு வரவுத் திட்டம் என்றுதான் பெயர் பெறவேண்டும் என்று யான் கருதுகின்றேன். ஏனெனில், எங்கள் மகாமந்திரிமார் முதலிற் செலவினங்களையெல்லாம் கணக்கிடுகின்றனர். அதன் பின்னரே வரவினங்களை மதிப்பிடுகின்றனர். அப்படி மதிப்பிடும்போது வரவினங்கள் செலவினங்களுக்கு ஈடுசெய்ய வேண்டும். அவ்வாறு அவ்வரவினங்கள் ஈடு செய்யத் தவறினுல், அவ்வரவினங்களையே அதிகப்படுத்துகின்றனரேயன்றிச் செலவினங்களைத் தீண்டமாட்டார்கள். அதனைத் "திருவாரூர்த் தேர்" மாதிரி அப்படியே நிறுத்தி வைத்துக் கொள்கின்றனர். இந்நிலைமையில் அதைச் செலவு வரவுத் திட்டமென்பதில் என்ன பிழை என்று கேட்கிறேன். இந்தத் திட்டம் இந்நிலையினின்று நீங்கிப் பழையபடி வரவு செலவுத்திட்டம் ஆகும் நாள் எந்நாளோ தெரியாது. அதுவரை இலங்கை மக்கள் பாடு திராசதொல்லைதான் என்பது சொல்லவும் வேண்டுமோ?

சேற்றிலகப்பட்ட பார்ப்பான்

பார்ப்பனுெருவன் தனிவழி சென்றுன். வழியில் ஒருகுளம். அதில் ஒரு கிழப்புலி. அதன் கையில் ஒரு பொற்காப்பு மின்னுவது போன்றிருந்தது. இயல்பிலேயே பேராசை பிடித்த பார்ப்பான் எப்படியும் அதைப் பெறவேண்டும் என்று அங்கலாய்த்தான். அக்காப்பு இருப்பது புலியின் கையில் என்பதையும் அவன் பேராசை மறக்கச் செய்தது. புலியின் வெளிவேஷத்திலும் பேச்சிலும் ஏமாந்து அக்காப்பைப்பெறுதற்காகக் குளத்திறங்கிப் புலியண்டை சென்றுன். சென்றவன் தனது கால்கள், இழுத்தெடுக்க முடியாத ஆழமான சேற்றில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு நின்று பட்ட அவஸ்தையை எல்லோரும் அறிவர். மேலைதேசத்திலும் இப்படியொரு பார்ப்பான் இப்போது நின்று திண்டாடப் போகின்றுன் என்பதை எமது அரிமா அவதானித்து விட்டது. அந்தப் பார்ப்பான் யார்? இத்தாலி. ஹிற்லர் மூலமாக ஜேர்மனி பலநாடுகளைக் கைப்பற்றி வருவதைப் பார்த்து இத்தாலியப் பார்ப்பானும் அங்கலாய்த்தான். ஜனநாயக நாடுகளுக்கு மாருக ஹிற்லரோடு சேர்ந்தான். நரிபோலப் பிற்புறமாக நின்று பிரான்ஸைக் குத்தினுன். இப்போதுஎன்னவென்றுல், பாலஸ்தீனத்தை இத்தாலிய ஏகாதிபத்தியத்தோடு சேர்த்துக் கொள்ளலாமென்று பேராசை கொள்கின்றுன். இத்தாலிய பத்திரிகைகளெல்லாம் அவ்விஷயம் பற்றி அடிக்கடி முழக்குகின்றன; ஆகாயக் கோட்டைகள் கட்டுகின்றன. பாலஸ்தீனம் என்னும் பொற்காப்பு, கிழப்புலியாகும் பிரிட்டிஷ் புலியின் கையிலிருக்கின்றதென்பதை இத்தாலிப் பார்ப்பான் மறந்து அங்கலாய்க்கின்றுனே ஐரோப்பிய யுத்தத்தில் இத்தாலி கலந்து கொண்டபின், உண்மையான யுத்தம் இன்னும் ஆரம்பமாகவில்லை. அப்படியான யுத்தச் சேற்றில் அகப்படும்போது தான் பேராசையுற்ற இத்தாலியப் பார்ப்பானுக்குத் தன பேராசையின் பலன் தெரியுமென்று அரிமா ஜோதிஷங் கூறுகின்றது.

குறிசுடும்வேலை

இந்தியாவில் ஒரு பெரிய தேசிய மகாசபை உளது. அது இந்தியாவுக்கு மாத்திரமல்ல உலகத்துக்கே ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றது. அதன் உயரிய தொண்டுகளை உலகம் நன்கறியும். ஆனுல், அதே பெயரிற் பாதியைக் கவர்ந்து கொண்ட இலங்கைத் தேசிய மகாசபையும் ஒன்றுளது. அதுவும் சில தொண்டுகள் செய்து வருகின்றது. அவற்றில் ஒன்று, அண்மையில் அது குறிசுடும் வேலையை ஆரம்பித்திருப்பதாகும். மாடுகளுக்குக் குறிசுடுவதுபோல, இலங்கையிலுள்ள எட்டுச் சங்கங்களுக்கு அது குறிசுட்டு அச் சங்கங்களெல்லாம் சட்டசபைகளில் ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது வகுப்பின் பிரதிநிதித்துவத்தை ஆதரிக்குஞ் சங்கங்களாகத் தன்னுற் கருதப்படும் என்று நிர்மானித்திருக்கிறது. இவ்வாறு குறிசுடப்பட்ட சங்கங்களாவன:— ஐரோப்பியர் சங்கம், இலங்கை முஸ்லிம்கள் சங்கம், மலாய் அசோசியேசன், பறங்கியர் சங்கம், இலங்கை இந்தியக் காங்கிரஸ், யாழ்ப்பாணச் சங்கம், கண்டியர் தேசிய சங்கம் என்பனவாம். இவையேயுமன்றி, சிங்கள மகாசபைக்கும் இவற்றிற்குப் போலவே குறிசுடவேண்டுமென்று அத்தேசியமகாசபை நிர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. குறிசுடும் தேசிய மகாசபையையும் குறிசுடப்படும் மற்றச் சங்கங்களையும் பார்க்க நமது சிங்கத்துக்கு இது மூக்குட் குமுஞ் சிரிப்புண்டாகின்றது.

உடுக்கை இழந்தவன் கை

சபை நடுவே ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி அவன் மானத்தைக் காப்பாற்றுவது போல, நண்பனுக்கு இடுக்கண் வந்தவிடத்து அப்பொழுதே சென்று உதவிபுரிந்து அந்த இடுக்கணை நீக்குவதே நட்பு என்று திருவள்ளுவர் சொல்லுகிருர். அவ்வாறு சொல்லுமிடத்துத்தான் "உடுக்கை இழந்தவன் கை" என்னுஞ் சொற்களை அவர் உபயோகிக்கிருர். இக்காலத்தில் ஒரு கை, உலக அரங்கில் உடுக்கை இழந்தவனைப் போல் நிற்கும் பிரிட்டனுக்கு உதவி புரிய முன்வந்திருக்கின்றது. அது எது? அமெரிக்கா. பிரான்சியபடையினர் ஜேர்மனியோடு யுத்தஞ் செய்து எதிர்த்து நிற்கமாட்டாமல் தோல்வியுற்றுப் புறமுதுகிட்டோடிய போதெல்லாம், "ஓ! எங்களிடம் இன்னும் சில ஆகாயவிமானங்களிருந்தாலோ" என்று கையை உதறிக் கொண்டும் வாயவிட்டு ஆற்றிக் கொண்டும் மானங்கெட்டு ஓடினுர்கள் என்று கூறப்பட்டது. அந்த நிலைமை இங்கிலாந்துக்கு ஏற்படாமல் அமெரிக்கா என்னுங் கை உதவ முன்வந்திருக்கின்றதைக் கண்டு அரிமா ஒரு கால் தன் பிடர் மயிரைச் சிலுப்பி மகிழ்கின்றது. பிரிட்டன் தனக்கு வேண்டிய விமானங்களை ஐக்கிய அமெரிக்காவிடம் விலைக்குக் கேட்டது. அமெரிக்கா இந்த உதவியை மிக்க ஊக்கத்தோடு செய்யுமோ அன்றிக் கை சோர விடுமோ என்ற அச்சம் பலருக்கிருந்தது. அந்த அச்சத்துக்கு இனி இடமில்லையெனத்தெரிகிறது. ஏனெனில், பிரிட்டன் கேட்டவிமானங்களுக்கு அதிகமாக, பிரிட்டனுக்காக மாதமொன்றுக்கு 3000 விமானங்களை உற்பத்திசெய்ய அமெரிக்கா சம்மதமளித்திருக்கின்றது என்று பிருத்தானிய விமான உற்பத்தி மந்திரி பெவர்புறூக் பிரபு ஒலிபரப்புக் கருவிமூலம் சென்ற புதன்கிழமை இரவு தெரிவித்திருக்கின்றுர். இது உண்மையாகும் பக்ஷத்தில், பிரிட்டனுக்கு அமெரிக்கா உடுக்கை இழந்தவன் கைபோன்று உதவிபுரிய முன்வந்திருக்கின்றதென்பது சொல்லவும் வேண்டுமோ? என்று எம் அரிமா கர்ஜிக்கின்றது.

அடடா!

தெய்வத்திடம் சென்றவர்களுக்குமா இக்கதிநேர வேண்டும்? யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்குச் சென்று கதிர்காமப் பெருமானைத் தரிசித்து மீளவும் யாழ்ப்பாணம் திரும்பிய யாத்திரிகர்கள் சிலருக்குத் திடீரென வழியில் ஒருவிபத்து நேர்ந்துவிட்டதேனென்று சிங்கம் கண்ணீர் விடுகின்றது. சென்ற வியாழக்கிழமை காலை குறித்த யாத்திரிகர்கள் பஸ்மார்க்கமாக வரும்போது அநுராதபுரத்துக்கு 5 மைலுக்கப்பால், சாரதி பஸ்ஸை ஒரு முடக்கில் திருப்பும்போது பஸ் கவிழ்ந்துவிழுந்து சேதமடைந்தது. சாரதியும் படுகாயமுற்றுன். பஸ்ஸில் வந்த யாத்திரிகர்களும் பெரிதுங்காயமுற்றனர். இவர்களில் மூவர் அநுராதபுர வைத்தியசாலையில் தேகவியோகமாயினர். இவர்கள் இறக்கும்போது கதிர்காமக்கடவுளே! என்று அவன் சிந்தனையோடேயே இறந்திருப்பார்களென்பது சொல்லவும் வேண்டுமா! இவர்கள் சற்கதியடைவார்களாக என்று சிங்கம் தெய்வத்தை வேண்டுகின்றது. பஸ்பிரயாணத்தின் ஆபத்தை இனியாயினும் நம்மவர் உணர்வாராக. பஸ்சாரதிகளும் ஜாக்கிரதையாகஇருப்பாராக.

ஐயோ பாவம்!

பிரான்ஸ் சரணுகதி படைத்தார், பெட்டேன் சர்வாதிகாரியாக்கப்பட்டார். அவர் சர்வாதிகாரியாக்கப்பட்டதும் போதும் அவர் படும் பாடும் போதும். ஐயோ பாவம்! அந்த மனுஷனின் வாயிற் கடிவாளம் போட்டு அக்கடிவாளத்தின் ஒருபக்கவாரை ஹிற்லரும் மறுபக்கவாரை முசோலினியுமாகப் பிடித்துக் கொண்டு அவரைப் படுத்தாத பாடெல்லாம் படுத்துகின்றுர்கள். பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்றநிலையில் அவர் இப்போது நின்று தள்ளாடுகின்றுர். அவருக்கோ வயசு அதிகம். இந்தக் கிழட்டுக் குதிரையின் கடிவாளம் இருவர் கையில் அகப்பட்டுக்கொண்டால், அதுவும் இரு பிரபலத் தம்பிரான்கள் கையில அகப்பட்டுக் கொண்டால், அதன் நிலைமை பற்றிச் சொல்லவும் வேண்டுமா! அவர் நிலையைப் பார்த்து எமது அரிமா இரங்குகின்றது. இந்த மனிதனை அவர்கள் என்ன செய்யும்படி கட்டளையிட்டிருக்கிருர்கள் தெரியுமா! ஜேர்மனியோடு பிரான்ஸ் போர் தொடங்கியபோது அந்நாட்டின் முதல மந்திரியாயிருந்த எம். டலாடியர் மீதும் அவருடன் சேர்ந்த சக மந்திரிகளான மற்ற மூன்று மந்திரிகள் மீதும், ஜேர்மனி மீதுபோர் தொடங்கிய குற்றத்திற்காக விசாரணை நடத்த வேண்டுமென்று தூண்டியிருக்கின்றுர்கள். இந்த வேலையைப் பெட்டேன் இப்போது செய்வாராயின், யார்கண்டது, இன்னுஞ் சில காலத்தில்—ஏன் சில மாதங்களில்—மற்றொரு மந்திரிசபை அதிகாரத்துக்குவந்து பிரான்ஸை ஹிற்லரிடம் காட்டிக்கொடுத்தமைக்காகப் பெட்டேன் மீது விசாரணை நடத்தவுங் கூடுமல்லவா என்று சிங்கம் சிறந்த சந்தேகத்தோடு பெட்டேன் மீது பெரிதும் இரங்குகின்றது.

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

இவ்வடிகளின் உண்மையை இன்றைய ஐரோப்பாவில் அடிக்கடி நாம் பார்த்து வருகின்றேமல்லவா?

திரு. இராமநாதன் ஜப்பானிலிருந்து திரும்பினுர்

ஜப்பானிலுள்ள சிறுதிட்டக் கைத்தொழில்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஜப்பானுக்கு வருமாறு ஜப்பான் அரசாங்கம் விடுத்த அழைப்பின்பேரில், ஜப்பானுக்குச் சென்றிருந்த சென்னையின் பழைய காங்கிரஸ் மந்திரி திரு. எஸ் இராமநாதன் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் வழியில் சென்ற புதன் கிழமையன்று கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

மண்பாண்டச் சாமான்கள், காகிதம், ரேந்தை போன்ற சாமான்கள் ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் முறைகளை இந்தியரும் பின்பற்றி நடக்கலாமென்று திரு. இராமநாதன் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினுர்.

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலைச் சுகாதாரவாரம்

சென்ற 23.7.40 செவ்வாய்க்கிழமை உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் கூடிய கூட்டமொன்றில் மாணவர்களால் ஆடல், பாடல், சம்பாஷணைகளும் ஆசிரியர் திரு. சீ. சி. முருகேசு அவர்களால் "நாம் கையாள வேண்டிய சுகாதார முறைகள்" என்னும் விடயம் பற்றிய பிரசங்கமும் நடைபெற்றது.

ஈற்றில் தலைவர் திரு. சே. கணபதிப்பிள்ளை ஆசிரியரின் குறிப்புரையுடனும் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது நிறைவேறியது.

—சுத.

அங்கும் இங்கும்

*

(பட்டின வாசி)

நல்ல சகுனம்தான்!
ஆனால்.........

இலங்கையிலும் ஓர் தேசிய காங்கிரஸ் இருக்கிறது. அதன் லட்சியம் இலங்கைக்குச் சுயராச்சியம் எடுத்துக் கொடுத்தலேயாம். இந்த லட்சியத்தைப் பூர்த்திசெய்வதற்காகக் காங்கிரஸ் மகாசபையினர் இற்றைவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்தாம் என்ன? சுயராச்சியம், குடியேற்றநாட்டந்தஸ்து, ஜனநாயகம் என்னும் பதங்களை ஓயாமற் கூறி வருவதனாலும் அரசியல் மன்றங்களுக்குள் தாழ்ந்த விதண்டாவாதம் பேசுவதனாலும் சுயராச்சியத்தின் நிழலைத்தானும் இவர்கள் அடையப் போவதில்லை என்பதை இக் காங்கிரஸ் நிருவாகிகளுக்குத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றேன். அரசியற் சுதந்தரம் பெறமுன் வகுப்பு ஒற்றுமை, பொருளாதாரத் துறையில் தற்பாதுகாப்பு என்பவற்றைப் பூரணமாகப் பெற முயற்சி செய்தல் வேண்டும். இந்தியக் காங்கிரஸ் ஸ்தாபனம் சென்ற 50 ஆண்டுகட்குமேலாக இவ்விஷயத்தையே வற்புறுத்தி, இயன்ற தொண்டினைச் செய்து பாரதநாட்டினை முன்னுக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. இந்த நல்ல குணம் இலங்கைக் காங்கிரசில் இதுவரை மருந்துக்குக்கூடக் காணப்படவில்லை. தேசியப் போர்வையுடன் தாண்டவமாடும் வகுப்புவாதக் குழுவினரைக் கொண்ட ஓர் ஸ்தாபனம் என்னும் ஓர் அழகான நாமத்தை இதற்குச் சூட்டி விருப்பதில் இருந்து இதன் போக்கு எத்தகையதென்று ஒருவாறு விளங்கும். எது எப்படி இருந்தபோதிலும் இந்த ஸ்தாபனம் மிஸ்டர் கொறியாவின் தலைமையின்கீழ் புத்துயிர் கொண்டு தொண்டாற்ற முனைந்திருக்கின்றது. வகுப்புவாதிகளுக்கு 'சுத்தா' கொடுத்து, இலங்கையில் வசிக்கும் எல்லார்க்கும் சம[illegible] கொடுக்கப்படல் வேண்டும் என்ற நோக்குடைய தேசிய வாதிகளே அங்கத்தவர்களாகச் சேரலாவது எனத் தீர்மானித்துக் கருமம் ஆற்றத் தொடங்கியிருக்கிறது. இது இலங்கையின் எதிர்கால சுபிட்சத்திற்கான நற் சகுனமே! ஆனால் முன்பழமுறை செய்தஅரசியல் குட்டிக்கரணங்களை இனியும்இம் மகாசபை அடிக்காது இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

யாழ்ப்பாணம்
ஐக்கிய மத்திய வங்கி.

ஓர் காரியத்தைத் தொடங்கி நிருவகிக்கும் ஆற்றல் நம்மவர்க்கு இல்லையென்னும் அபவாதம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. இவ் அபவாதம் ஆதாரமற்றது என்பதனை நிலைநாட்ட அதிஷ்டவசமாக நம்மத்தியிற் சில ஸ்தாபனங்கள் கண்டுபில் உள. அவற்றில் ஒன்று யாழ்ப்பாணம் ஐக்கிய மத்திய வங்கி. ஒத்துழைப்பை ஆதாரமாகக் கொண்டு, கட்சிப் பிரிவினை முதலாம் பூசல்களுக்குள்ளகப்படாது சென்ற பதினொரு வருஷகாலமாக இவ் வங்கி சிறப்புற வளர்ந்து, இப்போது ஓர்பெரிய விருட்சமாகஇருப்பது எல்லோர்க்கும் பெருமையை அளிக்கக்கூடியதொன்றாகும். இவ் வங்கியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது அதன் தலைவர் முதலியார் V. பொன்னம்பலம் அவர்கள் இவ்வங்கிக்கு என ஓர் சொந்தக் கட்டிடம் ஆவசியகம் தேவையென்றும்,]அதற்கெனப்பதினாயிரம் ரூபாவரையில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறியுள்ளார். காலந்தாமதமின்றி அடுத்த வருடாந்தக் கூட்டத்திற்கிடையில் இவ் வங்கிக் கட்டிடம் பூர்த்தியாகி அக்கூட்டம் அக் கட்டிட மண்டபத்திலேயே குதூகலமாக நிகழுமென எதிர்பார்க்கிறேன். நிற்க, ஒத்துழைப்பை ஆதாரமாகக் கொண்டு, இந்த யாழ்ப்பாணத்தாரின் நன்மைக்குரிய அநேக காரியங்கள் இன்னும் செய்ய வேண்டியிருக்கின்றன. பல்வேறு கைத்தொழிற் சாலைகள், ஓர் தினசரிப் பத்திரிகை, என்பன அவற்றுட் சிலவாம். ஐக்கிய இயக்கத்தில் திளைத்து, மிகுந்த அநுபவம் பெற்றுள்ள ஒத்துழைப்பாளர்கள், இவ்விஷயங்களில் சிரத்தை கொண்டால், நம் நாடு பொருளாதார அரசியல் துறைகளில் முன்னேற்றம் அடையும்.

யும் என்பதற்கு என்ன ஆட்சேபனை யுண்டு?

இன்னும் கண் திறக்கவில்லை.

இந்திய விவகாரம் இன்னும் சீர்ப்படும் நிலைமையைக் காணவில்லை. முதலில் ஒத்துழையுங்கள்: யுத்தம் முடிந்தபின், கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அநுபவிக்கும் குடியேற்றநாட்டந்தஸ்தாம் சுயராச்சியத்தை அளிக்கின்றோம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுகின்றது. பின்னை என்பது இல்லையென்பதற்கு அர்த்தம்; இந்தியாவாகிய எமக்கு இப்போதே பூரண சுதந்திரத்தைக் கொடுங்கள்; சமத்துவ நிலையில் நாங்கள் உங்களுக்குப் பூரண உதவி தருகிறோம் என்கின்றனர் இந்தியர். இந்த நெருக்கடியான நிலையில் இங்கிலாந்துக்கு 40 கோடி இந்திய மக்களின் பூரணமான மனப்பூர்வமான உதவி இன்றியமையாதது. இந்த உதவியைப் பிரிட்டிஷார் வழவழாக் கொள்கையினாலும், விளக்கெண்ணெய் நியாயத்தினாலும், உதறித் தள்ளுவார்களேயானால் அது அவர்கள் கொண்ட லட்சியத்திற்கு உதவிபுரிந்ததாகாது என்பதே உலகோர் அபிப்பிராயமாகும்.

கடைசியில் இதற்கும் வந்துவிட்டதே.

கடைசியில், நம் யாழ்ப்பாண நகரசங்க விவகாரம் சுப்பிரீம் கோட்டிற்கும் இழுபட்டுவிட்டது. இது எவ்வளவு துக்ககரமான விஷயம் என்பதை இதிற் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்குத் தாழ்மையுடன் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். நகரசங்க அங்கத்தவர்களிற் பெரும்பாலானோர் சட்டவல்லுநர் ஆவர். சட்டத்தில் இரு கட்சிகளுக்கும் இடம் உண்டு என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளுவர். கிண்டக் கிண்டக் கிளையும் கஞ்சகமும் என்று சாட்டடியாகக் கூறுவர். எனவே, குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை; நமது நகரசபை அங்கத்தவர்கள் குற்றம் பிடித்தலை விடுத்து, நல்லெண்ணத்தை ஆதாரமாகக் கொண்டு, பரஸ்பரம் ஒத்துழைத்து, நகரத்தின் நன்மைக்கான கருமங்களை ஆற்றும்படி அவர்களை மீண்டும் ஒருமுறை வேண்டிக் கொள்ளுகிறேன்.

வரவுசெலவுத் திட்டம்.

அரசாங்கசபை முதல்வர் சேர். பரன ஜெயதிலக, தமது ஒன்பதாவது வரவுசெலவுத் திட்டத்தைச் சென்ற புதன்கிழமை சமர்ப்பித்துவிட்டார். குறித்த ஆண்டின் உத்தேச வருமானம் 117,900,260 ரூபாய்; செலவு 126,364,897 ரூபா ஆகும். எனவே வரவுக்கு மிஞ்சிய செலவு 9,464,367 ரூபா. இந்தக் குறைவைச் சரிப்படுத்துவதற்கு, பெற்றோல், சீனி என்பவற்றின்மீது அதிக இறக்குமதிவரியும், வருமானவரி உயர்வும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிச் செய்தும் வரவுக்கு மிஞ்சிய செலவாக இன்னும் முப்பதலட்சம் ரூபா ஏற்படுகிறது. இந்தத் தொகையைச் சிக்கனத்தை அநுட்டித்துச் சரிப்படுத்த முடியும் எனத் தாம் நம்புவதாக சேர் பரன் அன்று அரசாங்கசபையிற் கூறினார். இவ்வரவுசெலவுத் திட்டம் தீர்க்கதரிசன புத்தியுடன் தயாரிக்கப்படவில்லை என்பதே பொருளாதார நிபுணரின் அபிப்பிராயமாகும். ஐரோப்பாவில் ஓர் பயங்கர யுத்தம் நிகழுகின்றது. அதன் அதிர்ச்சி இங்கேயும் தென்படும் என்பதை சேர் பரனும் அவர்தம் சகாக்களும் மறந்துவிட்டனர். இந்த யுத்தம் இன்னும் சில மாதங்களுக்கு நடைபெறுமானால், இலங்கை அரசாங்கத்தின் துறைமுக வருமானம் மிகவும் குறைந்துவிடும். இத் தீர்க்கதரிசன புத்தியின்றி, பகற்கனவுகண்டு, கண்டபடி செலவினங்களை சேர் பரனும் அவர் சகாக்களும் அதிகரித்திருக்கின்றனர். அரசாங்க சபையில் உள்ளவர்கள் காலதேச நிலைமையையும் அதனால் பாதிக்கப்படும் இலங்கையின் பொருளாதார நிலைமையையும் நன்கு ஆராய்ந்து, ஏற்றபடி வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்கள் செய்வர் என எதிர்பார்க்கிறேன்.

திருநீறு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் நடக்கின்றன. இதுவே உத்தம வழிபாடு. இக் கருத்தை,

தருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் றனாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரானே,

என்னும் அப்பர் சுவாமிகளின் தேவாரத்திற் காண்க. திருநீறு நெற்றியிலே எப்பொழுதும் இருக்க வேண்டியது. காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசலமோசனஞ் செய்து கால்கழுவியபின்னும் திருநீறு அவசியம் பூசல்வேண்டும்.

திருநீறு அணியாமையின் இழிமையும், திருநீற்றின் பெருமையும், தமிழ் வேதங்களிற் பல இடத்திற் காட்டப்பட்டுள்ளன.*

அப்பர் சுவாமிகள்

"திருவெண்ணீ றணியாத திருவிலாரும்......அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே" எனவும், "அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்....பெயர்த்தும் வந்து பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" எனவும்,

மாணிக்கவாசக சுவாமிகள்

பிணியெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
றணிநிலா வணியி னான்றன் றொழும்பரோ டழுந்தியம்மா
றிணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே.

எனவும்,

உமாபதி தேவநாயனார்

.............ஆதியின் மேல்
உற்ற திருநீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே.

எனவுந் திருநீறணியாமையைக் கண்டித்தருளினர். திருநீற்றின் பெருமையைச் சம்பந்தசுவாமிகள் ஒரு பதிகம் முழுதிலும் பாராட்டியருளினர்.

அப்பர் சுவாமிகள்

எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிநீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கனருப்பூர் நடுதறியைக் காண லாமே

எனவும்,

திருமூல நாயனார்

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான சிவகதி சேர்வரே

எனவும்,

மாணிக்கவாசக சுவாமிகள்

பேசிற்று மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றுந் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே.

எனவும்,

பட்டினத் தடிகள்

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

எனவும் திருநீற்றைத் துதித்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

— சைவசாஸ்திர பரிபாலனம்.

---

* சில புல்லறிவாளர் திருநீறு பூசுவதால் ஒரு பயனுமில்லையென்று பிதற்றுவர். இவர்கள் தங்களை அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் திருமூலநாயனார் முதலியோரிலும் மேலான அறிவாளிகளென்று கருதும் சிதடர்களே. அப்படியாயின், அவர்கள் பாடிய தேவார திருவாசகம் முதலியவற்றை இவர்கள் பாராட்டுவதேனோ?

நாங்கள்வேண்டுவது சுயவாட்சியே

—0—

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் செய்து முடிக்கவேண்டும். இனி சமாதக் காரியங்கள் செய்ய வேண்டிய சமயத்தில் தாமதம் செய்யக்கூடாது. உடனே அறிக்கை வெளியிட்டால், காங்கிரஸ் முன்வந்து தேசப்பாதுகாப்புத் திட்டத்திற்கு உற்சாகமான ஆதரவு அளிக்க ஏற்பாடு செய்யும்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அறிக்கை

சென்னை, ஜூலை 22—.

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி பின்வருமாறு பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை அனுப்பினர்.

கோயமுத்தூர் ஜில்லாவில் பல கிராமங்களிலும், பட்டணங்களிலும் நான் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, இப்போதுதான் திரும்பினேன். ஆயிரக்கணக்கானவர்கள் கூடிய பெருங்கூட்டத்தில் தற்கால ராஜ்ய நிலைமையைப்பற்றி நான் பிரசங்கஞ் செய்தேன். காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தைப்பற்றிய ஸ்ரீமான். ஸி. இராஜகோபாலாச்சாரியார் நேற்றுச் செய்த பிரசங்கத்தையும் கவனித்தேன். காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தை நம்மவரிற் பெரும்பாலோர் ஆதரிப்பதாக நான் தயக்கமின்றித் திட்டமாகச் சொல்வேன். இந்தியா பிரிட்டனுடன் சேர்ந்து போராடவே விரும்புகிறது. ஹிட்லரைத் தோற்கடிப்பதற்காக மட்டுமல்ல, புதிய உலக நிலையை ஏற்படுத்தவும் ஜனநாயக ஆட்சி எங்கும் நன்கு நடக்கவும் பிரிட்டனோடு சேர்ந்து போராட இந்தியா விரும்புகிறது. இதற்காகத்தான் இந்தியத் தலைவர்கள் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமெனக் கேட்கிறார்கள். பிரிட்டனின் சுதந்திரத்தைக் காக்கவும் இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் இந்திய மஹா ஜனங்களை அவர்கள் ஏராளமான வரையில் தியாகம் செய்யும்படி கேட்க வேண்டுமானால் மேற்கண்ட நிபந்தனை அங்கீகரிக்கப்படவேண்டும். ஆதனால் தான் காங்கிரஸ் [illegible] முறையில் அதன் முதற் கோரிக்கையை இப்போது வெளியிட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கத்தில் காரியக் கமிட்டி கோருவதுபோல ஒரு தேசீய அரசாங்கம் ஏற்பட வேண்டுமென்பதும் நமது கோரிக்கை.

அரசாங்கத்துக்கும் காங்கிரஸுக்கும் ஒருவித ஒப்பந்தமும் ஏற்படக்கூடாதென்றும், தாங்கள் ஒத்துழைக்க வேண்டுமானால் காங்கிரஸுக்கும் லீக்குக்கும் ஒப்பந்தம் ஏற்படக்கூடாதென்றும், முஸ்லிம் லீக் சொல்லுகிறதென்றால், அது நியாயமல்ல. அவர்கள் நாட்டுக்கும் சரி அரசாங்கத்துக்குஞ் சரி நல்ல வழி காட்டவில்லை.

யுத்த ஏற்பாடுகளைத் தீவிரமாக நடத்தவும், இங்கு வசூலிக்கப்பட்டுப் பிறசால் செலவழிக்கப்படும் பணத்தை இந்தியர் இந்தியாவின் தற்காப்புக்காகவும் பிரிட்டனின் பாதுகாப்புக்காகவும் தாக வழியிற் செலவழிக்க வேண்டுமென்பதற்காகவுமே மத்திய அரசாங்கத்தில் தேசிய அரசாங்கம் வேண்டுமென நாங்கள் கோருகிறோம்.

ஒவ்வொரு நிமிஷமும் முக்கியமானதாக இருக்கிறது. சீனாவுக்கு பர்மாப்பாதை மூலம் பெட்ரோலும் ஆயுதங்களும் செல்வதைத் தடுக்கப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் முற்பட்டதால் அவர்கள் அந்தஸ்தைக் குறைத்து விட்டது. அவர்கள் ஜப்பானின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கு இணங்கியிருக்கக்கூடாது. ஆகவே, இப்போது இந்திய விஷயத்திலாவது நியாயப்படி நடந்துகொண்டால்தான் இழந்துபோன அந்த அந்தஸ்தை அவர்கள் திரும்பப் பெறக்கூடும். இதில் தாமதம் கூடாது.

மிஸ்டர் சர்ச்சிலும், பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டியில் முன்னம் சிறுபான்மை அறிக்கை எழுதிய அவர்துசகாவான மேஜர் அட்லியும் இந்தச் சந்தர்ப்பத்திற் சேற்றவாறு நடக்க வேண்டும்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புளூப்பைாட்"
K. A. இரத்தினசிங்கம்
Y 50. 3-4-39 3-3-41

யாத்திரீகர் பஸ் கவிழ்ந்தது

இரு ஸ்திரீகளுக்குப் படுகாயம்

கண்டி ஜூலை 23

நேற்றைய தினம் ஒரு யாத்திரீகர் கோஷ்டியை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று கடுகண்ணுவை இறக்கத்திலுள்ள வளைவுக்குச் சமீபமாக றேட்டோர அணைமீது மோதிக் கவிழ்ந்தது. இவ்விபத்தின் பலனாக, இரண்டு ஸ்திரீகள் படுகாயமுற்றனர். மற்றும் எட்டுப்பேர் சிறுகாயமுற்றனர்.

எட்டுப் பெண்கள் இரண்டு ஆண்கள் ஒரு சிறுவன் அடங்கிய குறித்த கோஷ்டி அநுராதபுரத்திற்கும் மற்றும் இடங்களுக்கும் யாத்திரை சென்று கண்டி—கடுகண்ணுவை றேட்டில் திரும்பி வரும்போது இக் கோரவிபத்து நிகழ்ந்தது.

ஐயரின்பெரேரா அடிலேன்நோனு என்னும் இரு ஸ்திரீகளும் கண்டி ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டனர்.

ஏ. ஸ்டீபன் பெரேரா என்னும் டிறைவர் அற்பகாயங்களோடுதப்பிக் கொண்டார். இன்று பிற்பகல் இவர் கண்டிப் பொலிஸ் நீதிபதி முன்னிலையிற் கொண்டு வரப்பட்டு 20 ரூபாய் பிணையில் விடப்பட்டார்.

அம்மையார் சுரந்தளித்த திருமுலைப் பாலைத் தாம் அருந்திய வரலாற்றை அறிவுறுத்தும்

ஆளுடைய பிள்ளையின் அருட்பாட்டு

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வுப் புலவர்கள் தேவாரத்திருமுறைகளையும் அவற்றின் வரலாற்றை விரித்துரைக்கும் திருத்தொண்டர் வரலாறெனும் பெரியபுராணத்தையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின்கண் காணப்படும் அகச்சான்றுகளையும் அவ்வகச் சான்றுகட் கொப்ப வாய்ந்து காணப்படும் புறச்சான்றுகளையுங் கண்டு வரலாற்றுண்மை மரபு உணர்ந்து கொள்வாராக. இவ்வாறன்றித் தத்தம் மனநிலைகளுக்கேற்ற உண்மைகளையெல்லாம் வெறும் பொய்க் கட்டுப்பாடுகள் என்றொதுக்கிவிடுதல் அறிவுடைமையாகாது.

முற்றும்.

பழைய சமசமாஜ அங்கத்தவர்

பாதுகாப்பிலிருந்து பிணையில் விடுதலை

டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவை ஆஜர் செய்யும்படி மேல்மாகாணப் பிஸ்காலுக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி தாக்கல் செய்த மனு சம்பந்தமான விசாரணை பிரதம நீதிபதி, நீதிபதி திரு. மோஸ்லி, நீதிபதி திரு. விஜயவாதன ஆகியோர் முன்னிலையில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது.

மேல்மாகாணப் பிஸ்கால் திரு. டப்ளியூ. ஓ. ஸ்டீவன்ஸ், டக்றர் விக்கிரமசிங்காவை ஆஜர் செய்தார்.

நீண்டநேர விசாரணையின் பின், டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவை மாத்தறைப் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் ஆஜராவதற்கு 1000 ரூபாய் சொந்தப் பிணையிலிருந்து விடுதலை செய்யும்படி பிரதம நீதிபதி உத்தரவிட்டார்.

பல் வைத்தியர்
எஸ். சாஸ்பத்திராஜு
லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர்; கண் பரிசோதிக்கும் திறமை வாய்ந்தவர்.
3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (பேருக்கட்டிடத்துக்குக் கிட்ட)
ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.
உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஒடுகள் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறுக்ஸ் ஸ்பிரோ, சிலிண்டர் பிளேனோ, சிலிண்டர் ஆதியாம் விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர ரீதியான எந்தக் கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்மலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியாற் செய்த கம்பிகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமான [illegible] பிரேம்களும் எம்மிடம் உண்டு.
டக்டர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.
எங்கள் விலைகுறைவு, நியாயமானது
Y 19 2-5 o 1-5-41

யாழ்ப்பாண ஆகாய விமான நிதி

வலிகாமம் மேற்குப் பிரிவிலுள்ளோரின் பொதுக்கூட்ட மொன்று 24-7-40 புதன்கிழமை பி. ப. 4 மணியளவில் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் V. வீரசிங்கம் B. A. அவர்களின் தலைமையிற் கூட்டப்பட்டது. அத்தருணம் நிகழ்ச்சிகளை நடாத்த திரு. இ. இராமலிங்கம் லிகிதராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்தருணம் வடமாகாண அதிபர் திரு. பிரசாத் அவர்களும் வலிகாமம் மேற்கு மணியகாரர் R. சின்னையா அவர்களும் பெருந் தொகையான கிராமவாசிகளும் சமூகங்கொடுத்தனர்.

அத்தருணம் தலைவர் அவர்கள் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் பெருமையையும் ஜனநாயக ஆட்சியின் சிறப்பையும் எடுத்து விளக்கியபின்பு வடமாகாண அதிபர் யுத்தநிலைமையைப் பற்றியும் யாழ்ப்பாணத்தார் அதற்காகச் செய்யக் கூடிய உதவியைப்பற்றியும் அதற்காகத் தாம் ஈடுபட்ட முறையைப்பற்றியும் இது வரை தம் வசம் ரூபா 9500 இருப்பதாகவும் கூறி ஆகாய விமான நிதிக்கு இப்பகுதியில் உள்ளவர்கள் ஏனைய பகுதியினரைப் போன்று பொருளுதவி செய்யவேண்டுமென்றும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பின்னர் வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்கள் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

பிரித்தானிய ஜனநாயக ஆட்சி நிலைநிற்கவும் நாசிகளின் ஆட்சி நிலைகெட்டழிந்து போகவும் இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

இதனோடு இப்பகுதியிலுள்ள ஆண்பாலார் பெண்பாலார் அனைவரும் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது. பண்டிதர் தில்லைநாதர் இதை அநுமதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

நாம் ஆகாய விமானநிதிக்கு உதவி செய்யப் பொருள்சேர்க்கும் பொருட்டு வலிகாமம் மேற்கு மணியகாரர் R. சின்னையா அவர்களைத் தலைவராகவும் நாலு கோவிற்பற்றுச் சங்கத் தலைவரையும் திரு. C. தில்லையம்பலம், திரு. V. வீரசிங்கம், திரு. இ. இராமலிங்கம், திரு S. அண்ணாமலை அவர்களை நிர்வாக உறுப்பினராகவும் இப்பகுதிக் கிராமச்சங்க அங்கத்தவர்களையும் தலைமைக் காரர்களையும் இவர்கட்கு உதவியினராயும் இருந்து கடமையாற்றும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகின்றது என்ற பிரேரணையை N. C. நற்குணம் பிரேரிக்கத் திரு. மயில்வாகனம் அநுமதிக்கப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

வெளியீடு மலர் 1

யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்போர் மத்தியசங்கம் ஓர் வேண்டுகோள்

சகோதர சகோதரிகளே!

யாழ்ப்பாணத்து இப்போதைய பொருளாதாரம் மிகவும் வருந்தத்தக்க நிலைமையிலிருக்கிறது. பெருவாய்ப்பகுதி ஐக்கிய மலாய்நாடுகளில் இருந்து பணம் வருதல் நின்றுவிட்டது. யாழ்ப்பாணத்துச் சுருட்டு விற்பனவு குறைந்துவிட்டது. பீடியும் சிகறேற்றும் எங்கும் பாவி வருகின்றன.

தொழிலாளிகள் வேலையில்லாது வருந்துகின்றனர். ஆங்கிலம் படித்த பிள்ளைகள் அரசாங்க உத்தியோகத்தில் இடம்பெறாது துன்பப் படுகின்றனர். பெற்றோர் அரிதாகத் தேடிய பொருள் முழுவதையும் படிப்பில் செலவழித்து விட வாலிபர்கள் உத்தியோகம் தேடி அலைந்து திரிகின்றார்கள்.

அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் நாடுவதில் எங்கள் பிள்ளைகளுக்கு இனி ஒருநன்மையும் வரப்போவதில்லை. கைத்தொழில், கமத்தொழில்களாலன்றி எங்களுக்கு மீட்சியில்லை. அதுவும் மூலதனம் அதிகமில்லாமல் நடத்தி வருவாய் பெறக்கூடியதாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குடிமையிலும் நடத்தக்கூடியதாயிருத்தல் நன்று. அப்படிப்பட்ட தொழில்களை யாழ்ப்பாணத்தில் விருத்தி செய்தற்கு வரியிறுப்போர் மத்தியசங்கம் பிரயாசைப்படுகின்றது.

இவைகளைப்பற்றி நன்கு விசாரித்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி இதன்கீழ்க் கையொப்பமிடும் எங்களை உபசபையாகச் சங்கம் நியமித்திருக்கின்றது. இவ்விஷயத்தைப்பற்றிய எங்கள் விசாரணைக்கு உதவி செய்தல் உங்கள் ஒவ்வொருவரின் கடமையன்றோ! இவ் விஷயம் ஊரிலுள்ள ஒவ்வொருவரின் நன்மைக்குக் காரணமாயுள்ளதல்லவா?

ஆகையால் எங்கள் தேசத்தின் ஈடேற்றத்தையும் இப்போதைய பொதுவான நிலைமையையும் விருத்தி செய்து வறுமையைப் போக்க நீங்கள் ஒவ்வொருவரும் ஊன்றி யோசித்து உங்களுக்குப் புலப்படும் வழிவகைகளை எங்களில் எவருக்காவது 1940ம்ஆ ஆவணி (ஆகஸ்ட்)மாசம் 10ந் திகதிக்கு முன் எழுத்துமூலமாக அறிவிக்கும்படி உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

உப சபை

1-ம் வட்டாரம் திரு. J. A. வீரசிங்கம் உலாந்தா பெரியதெரு.
2-ம் வட்டாரம் திரு. J.M. அந்தோனி ஆசிரியர் கரையூர்.
3-ம் வட்டாரம் திரு. M. சின்னத்துரை பென்சனர் கொழும்புத்துறை.
4-ம் வட்டாரம் டாக்டர் V. S. இராமநாதன், நாயன்மார்கட்டு.
5-ம் வட்டாரம் திரு. K. துரையப்பா முக்காடேட் நல்லூர்.

கடிதம்

அந்தணர்க்கடுக்குமா?

இந்துசாதனப் பத்திராசிரியருக்கு ஐயா!

தம்மனையாள் படிற்றொழுக்கம் பூண்டு நடந்தமை கண்டு ஆர்த்தையாகிப் போனமையைக் கண்டு, வைராக்கியத் தேசமதியப் பரதேசம் போய்ச் சிலகாலம் பரதேச சஞ்சாரஞ்செய்த ஐயரொருவர், அப்பெண் மீது கொண்ட மோகங்காரணமாக மீண்டும் வந்து அப்படிற்றொழுக்கமுடைய பெண்ணைச் சேர்த்து வாழத் துணிந்தால், அந்த ஐயருக்கும் அந்தணர்க்குரிய அறுதொழில்களையுஞ் செய்ய அதிகாரமுண்டா? அவருக்குக் கோயில்களிலே பூசை செய்ய, கொடியேற்றத் திருவிழா நடத்த, கல்யாண ஹோமஞ்செய்ய, வீட்டிலே திவசம் மகாளயம் புண்ணியவாசனம் முதலிய கருமங்களைச் செய்ய அதிகாரமுண்டா? அவரை இன்னமும் சைவர்கள் புரோகிதராக ஏற்றுக் கொள்ளலாமா? அவரைக்கொண்டு செய்விக்கும் கிரியைகளினாற் செய்விப்போர் தீமையல்லாமல் ஏதுங்கன்மையடைதல் முடியுமா? இப்படிப்பட்ட பதிதர்களைக்கொண்டு செய்விக்கும் கிரியைகள் பசுமட்கலத்தில் வார்க்கப்பட்ட நீர்போற் கொண்டானையும் கொடுத்தானையும் கெடுத்துப் பயனற்று விடுமென்று படித்தவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது மெய்தானா? பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடுமாமே?

இந்த விஷயத்திலுள்ள விதிவிலக்குகளை, தங்கள் அரிய பத்திரிகையை வாசிக்கும் பிராமணோத்தமர் வாயிலாகவே அறிய விரும்புகிறேன்.

இங்ஙனம்
ஓர் வேளாண் மகன்.

NOTICE OF SALE
கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. 13175
முத்துக்குமாரு வயித்திலிங்கம்-காரைதீவு மேற்கு
வழக்காளி
முருகர் கணபதிப்பிள்ளை-காரைதீவு மேற்கு
எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1938-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 4-ந்திகதி 13175-ம் இலக்கத் தீர்வையின் பிரகாரம், இதன் பின்னால் காணப்படும் ஆதனத்தை கொம்மிஷனர் கந்தையா முத்துக்குமாரு ஆகிய என்னால் 1940-ம் ஆண்டு ஆவணிமாதம் 31-ந் திகதி குறித்த காணியிலிருந்து சனிக்கிழமை பின்னேரம் மூன்று மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு இறை தங்கோடை வறுவாகலட்டி [illegible] இல. பர. (3½) மூன் நரையும் [illegible] பனைகளும் தென்னைமரங்களும் செய்பயிர் வான்பயிர்களும் அதில் நிற்கும் புளியமரமும் எல்லை கிழக்கு சின்னக் குட்டி மகள்பெண் வள்ளியம்மையினதும் அவள் பிள்ளைகளினதும் ஆதனம், வடக்கு முருகர் வேலுப்பிள்ளையின் ஆதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு ஒழுங்கையும் சின்னக்குட்டி தில்லையம்பலத்தின் ஆதனமும் இதடங்கலும்.

க. முத்துக்குமாரு
கொம்மிஷனர்

காரைதீவு
24-7-40
Mis 88 29.7.40

வேலணைத்தீவுச் சைவ இளைஞர் சபை

10-ம் ஆண்டு நிறைவுவிழா

வரும் 4-8-40 ஞாயிற்றுக்கிழமை யன்று வேலணைத்தீவுச் சைவ இளைஞர் சபையின் 10-ம் ஆண்டு நிறைவுவிழா டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் என்றும் அவ்வமயம் ஸ்ரீமான். சு. நடேசபிள்ளை B. A. B. L. F. R. [illegible] M. S. C. அவர்களாலும் திரு. வை. பொன்னுத்துரை அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் என்றும் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

'யுத்தக் கொம்மிற்றிகளிற் சேரலாமா?'

காந்திஜீ யோசனையைப் பெற மைசூர்க் காங்கிரஸின் முடிவு

பெங்களூர் ஜூலை 22

நேற்றுப் பிற்பகல் நடந்த மைசூர் சமஸ்தானக் காங்கிரஸின் காரியக் கொம்மிற்றிக் கூட்டத்தில், சமஸ்தானத்தில் நிறுவப்பட்டு வரும் யுத்தக் கொம்மிற்றிகளிற் காங்கிரஸ்காரர்கள் பங்கெடுத்துக் கொள்ளலாமா கூடாதா என்றவிஷயம்பற்றி யோசிக்கப்பட்டது. இவ்விஷயத்தில் காந்திஜியின்யோசனையைநாடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

6-ம் வட்டாரம் திரு V. M. வேலாயுதபிள்ளை, நாவலர்றேட் வண்கிழக்கு.
7-ம் வட்டாரம் திரு இ. சிவகுருநாதர் பிறக்டர் வண்கிழக்கு
8-ம்வட்டாரம் திரு. ச. நடராசா ஓட்டுமடம் வண்மேற்கு.

முருகன்-என் தாய்

திரு ஏ. பாலசுப்பிரமணியம்

பகவன் தன் மஞ்சட் கிரணங்களை பாகிலம் முழுவதும் பரப்பி இயற்கையன்னையின் சௌந்தரியத்தைப் பார்ப்போர் கண்கள் களிபேருவகை யடையுமாறு செய்யும் அற்புத அலங்காரமான மாலைவேளை. உழவர்கள் உளம் உவப்படையும் பொருட்டும், பார்ப்பவர் மனம் பரவசமடையும் பொருட்டும் செந்நெற் பயிர்கள் தங்கள் தங்கமயமான செங்கதிர்களை உயர்த்தி நீட்டித் தம்மைப் பார்ப்பவர்களைக் கண்டு நாணம் மேலிட்டுத் தம் தலை வணங்கி நிற்கும் அதியற்புத அலங்கார வயல்கள்.

அதையடுத்துப் பாவலரும், காதலரும் கண்டு களிபேருவகை யடையும் ஓர் கண் கவர் சிங்காரச் சோலை, சோலையினுள் அவசரமின்றிக் குற்றங் கூறும் பகைவரைக் கண்டு குட்டிக் கலைத்து ஓடச் செய்யும் கைப்பிடியன்ன குமுதமொட்டுக்களையும், அன்பர்களைக் கண்டு அகம் மகிழும் தன்மையைப் பளிங்குக் கண்ணாடிபோற் காட்டும் முகத்தினையொத்த வெண்டாமரை மலரையும், கூட்டங் கூட்டமாகப் பூத்து நிற்கும் ஆம்பல் மலரையும், பெண்களின் கண்ணையொத்த கயல் மீன்களையும் கொண்ட ஓர் காட்சி மிகுந்த தடாகம்.

அதனருகே "இடம்பட வீடெடேல்" என்ற கற்றமிழுணர்ந்த சொற்றிறன் மிகுந்த கற்றறி புலவராம் ஔவை மூதாட்டியார் கூறிய கூற்றுக்கிணங்க அமைக்கப்பட்ட இயற்கையழகு நிறைந்து விளங்கும் ஓர் சிறிய குடிசை. அது பாக்காய்ப் படர்ந்த முல்லைக் கொடியாலும், செழுமையாய்ச் செவ்வியதாய்ப் படர்ந்த செங்கீரைக் கொடிகளாலும் வேயப்பட்டது. இயற்கையின் வழியே தன் கடமைகளைச் செய்யும் ஓர் சுந்தர வதனன் அக்குடிசையினின்றும் புறப்படுகின்றான். அவனுக்கு உற்றார் உறவார் ஒருவரும் இல்லை. அவன் சோகம் நிரம்பியவனாய் [illegible]ற "முருகன்-என்தாய்" என்ற பாங்காகப் பசும் புற்றரையிலே வெட்டப்பட்ட இடத்தில் வீழ்ந்து, வணங்கி எழுந்து தழு தழுத்த குரலில் புலம்புகின்றான்:-

[illegible] எங்கும் பிரகாசமாய் நீக்கமின்றி நிற்கும் என் அன்னையே! அறிவையே—ஞானசொரூபத்தையே—உனது திவ்விய வடிவாகக் கொண்டு, உன்னை அன்புடன் அழைக்கும் அன்பர்கட்கு அளவிலா ஆனந்த மளிக்கும் ஆனந்த மாமலையே! உலகில் மிகப் பெரியது எது? அது புகழ் எனப்படுவது. அத்தகைய புகழை அடிமுடி தேடிய அரியும் பிரமனும் மற்றைய சகல தேவாதிகளும் குற்றங் கண்டு பிடிக்க முடியாதபடி களங்கமற்ற புகழைக் கொண்டவனே. உனது தேஜஸ்தானென்ன? சூரியவொளியென்று சொல்லவா? தண்மதிச் சந்திரனின் ஒளியென்று சொல்லவா? விண்மீன்களின் ஒளியென்று சொல்லவா? அன்னையே! இவ்வொளிகளுக்குக் கட்டுப்படாது, சகல ஆன்மாக்களுக்கும் விரும்பி உன்னைப் பூசிக்க அவர்க்கு உனது உளம் களித்து அன்புடன் கருணை கூர்ந்து அருளும் அருளையே உனது திவ்விய ஒளியாகக் கொண்டவனே. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்.

"தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் கூற்றுக் கிலக்காக வரவேண்டுமிவன் என்று தம் திருவுள்ளத்திற் கொண்டு என்னை இம் மாயப் பிரபஞ்சத்திற் தோற்றுவித்தீரே. ஆனால் நானோ உமது திருவுள்ளப் பாங்கிற்கு எள்ளளவும் அருகனற்றவனாகச் சென்று கொண்டிருக்கின்றேன். தாயே! என்னை இடேற்றிவிடும்.

'பெற்றவளறிவாள் பிள்ளையினருமை" என்பது நம் ஆன்றோர் மொழியன்றோ. நீர் எனது தாய். நான் உமது புத்திரன் அல்லவா? "காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு" அன்றோ. நான் கேவல நிலையை அடைந்திருக்கிறேனே. அதனை நீர் அறியீரா? நீர் என்னைப் பெறாத கல்நெஞ்சினரா? என்னை நீர் நல்வழியிற் செலுத்தும்.

இந்நிலவுலகில் மக்கள் உயிர்வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதனவான காற்று, உணவு என்னும் இரண்டனுள் உணவைச் சேகரிப்பதற்கு மிக இன்றியமையாததாய் விளங்கும் மாடும், மற்றை விலங்குகளும் திடீர் திடீரென இறக்கின்றனவே, நான் என்னசெய்வேன். மக்கள் தாம் எவ்விதமானவர்களாயிருக்கிறார்கள், வஞ்சனை பொறாமை லோபம் ஆய தன்மைகளே மிகுந்து, ஒருவரை ஒருவர் பகைத்துக் கடைசியில் மண்ணோடு மண்ணாகப் போகின்றனரே. ஆடையாபரணங்கள் தாம் நெடுக நிலைத்திருக்கின்றனவா? இல்லையே. அல்லது காட்சியிற்காணும் பொருட்கள் தான் நிலைத்திருக்கின்றனவா? இல்லையே. இதையறிந்த நானும் சிற்சில வேளைகளில் அவைகளில் கட்டுப்பட்டு விடுகின்றேனே.

அன்னையே! என் கைகளால் மலர்களைத் தூவி மெய்சிலிர்த்துப் பின் இரு கைகூப்பி விண்மாரியென வெள்ளிரு கண்மாரி பெய்ய ஆசையாகிய ஆவேசத்தோடு மோட்சமாகிய சமுத்திரத்தில் மூழ்கி முருகவன்னையே! தாயே!! என்று தழுதழுத்த குரலுடன் வணங்காத துன்மார்க்கனாகிய என்னை, மைந்தா! உலக விடயங்களெல்லாம் பொய். நீ அவைகளில் பற்று வையாதே. "தாயிற் சிறந்ததொரு கோயிலில்லை" என்ற அவ்வாக்கியப் பொருளை நீ உணர்ந்து பூசிப்பாயாக. நீ சன்மார்க்கனாயிரு. அதாவது உண்மை நெறியிற் செல்பவனாயிரு. சத்-உண்மை—என்னும் சொல்லுக்கு தோற்ற, ஒடுக்க, மாறுதலிலாத ஒன்று என்பதன்றோ பொருள். அது நீக்கமின்றி அறிவாய் எங்கும் வியாபித்திருக்கும். இவ்வுண்மை நெறிக்கு மூலகாரணமாயிருப்பது இயற்கை. அவ்வியற்கையை விட்டு விடுவாயானால் சன்மார்க்க நெறியிற் பிரவேசிக்க மாட்டாய். ஆகவே இயற்கையின் தன்மையை உணர்ந்து உன்கடமையைச் செய் என்று எனக்கு உமது அருளினாலே அறிவுறுத்திய என் இனிய தாயே! உமக்கு வணக்கம்.

தன் குழந்தைமீது ஈ மொய்த்த போது அவைகளை ஓட்டியும்; நோய் வந்தபோது அவைகட்கேற்ற விதமாய் மருந்தினை அளித்து அன்னவன் நோயைப் போக்கியும், அவன் நன்னிலையடைந்து மகிழும் பொருட்டு நல்லறிவைப் புகட்டியும் கைமாறு கருதாது செய்யும் பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய அன்னையே! உனது திருவருளுக்கு, அன்பாகிய உன்னை வந்து அடைய வேண்டிய மக்கள் நம் இலங்காதீவில் உன்னை நினையாது பொய்யானபுகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு அடிமைவாழ்வில் மிகுந்த பற்றுடையவராய் வன்றோ இருக்கிறார்கள். உனது சித்தைக்கினிய இன்பமளிக்கத் தேசசேவையில் ஈடுபடாது மாயப் பொருட்களில் ஆசைப்பட்டு அவற்றின் அடிமைக்காளாகிறார்களே. உமது அழகிய திருமுகத்தையும் திவ்விய பாதத்தையும் தம் கருத்திற் கொள்ளாது பலர் செருக்கிக் களிப்பதைக் கண்டு உமது பேரில் அன்பு வைக்கத் தொடங்கியவர்களும் பின்னர்ப் பொய்யானமாயையின் பற்றிலேயே அழுந்துகிறார்களே. பொய் களவு காமம் குரோதமாகிய வைகளை எதிர்த்துப் போராடும் வல்லமையில்லாது அவைகளில் கட்டுப்பட்டு விடுகின்றார்களே. தாயே இவைகளைக் காணவும் கேட்கவும் என் கருங்கல்மனமும் எவ்வளவோ கலக்கமடைகின்றதே.

தற்பொழுது நடக்கும் மகாயுத்தத்தினைப் பாரும். நாட்டாசை மிகுந்த சர்வாதிகாரியொருவர், தர்மநெறியுடன் அரசாட்சி செய்யும் அரசனை எதிர்த்து எத்தனையோ சேலொத்த விழிகளைக் கொண்ட அரிவையரையும், பால் மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகளையும், மூன்று காலுடைய தொண்டுக் கிழவரையும் எத்தனையோ மலையொத்த வீரம்படைத்த ஆண் சிங்கங்களையும் கொல்கின்றாரே. இதனைக் கண்டு மக்கள்படும் அவஸ்தைதானென்ன. [illegible]களையும் தன்னிடத்தேயடக்கிய—ஆதி அந்தமில்லாத—நம சைவசமயமானது தற்பொழுது எவ்வளவு கீழ்நிலையை அடைந்திருக்கின்றது. "நீறில்லா நெற்றி பாழ்" என்பதை யுணராது எத்தனைபேர் எத்தனை விதமான காரியங்களைச் செய்கின்றனர். பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்த நம் கன்னித் தண்டமிழின் நிலைதானென்ன? உம்மை நண்ணாதார் முழு வலிப்பவும் நல்லுற்றார் நலித்தேங்கவும் செய்கின்றார்களே. ஆண்மையையும் வீரத்தையும் எனக்குப் பாலூட்டும் பொழுதே ஊட்டிவிட்ட என் இனிய தாயே! மேற்படி சம்பவங்களை என் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் மனதார நினைக்க என் மனம் எவ்வளவு அச்சமும் துன்பமும் அடைகின்றது. எனது மனத்திலே தோன்றிய அச்சத்தையும் துன்பத்தையும் நீக்கியருளவும். இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்று எழுதிக் காட்டமுடியாதபடி நிறைந்துள்ள என் மாமணித்தாயே!

நான் இன்னது செய்ய வேண்டும்: இன்னது செய்ய வேண்டியதில்லை என்று என் அறிவைச் செலுத்தி அறிய முடியாதவனுக்குத் தளர்ந்துவிட்டதும் என்னைக் குழந்தாய்! நீ இதுசெய் என்று எனக்கறிவுறுத்தி ஆதரித்தணைத்த அருள் மிகுந்த தாயே!

பொய் கொலை களவு கள் காமம் ஆய தீயவைற்றையெல்லாம் உன் திருவருளாற்றீர்த்து விட்டு என்னைக் காப்பாற்ற வேண்டிக் கனவின் கண்ணும் நனவின் கண்ணும் விட்டுப் பிரியாதுறையும் கருணை மிகுந்த தாயே!

கற்கண்டுக் கட்டியோ? சர்க்கரைப் பாகோ! என்று நான் நினைந்து மகிழ்ந்து தூக்கத்திலிருந்த என்னை இப்படித் தூங்காதே. இதனால் உனக்கு மனத்தாலும் நினைக்க முடியாத கஷ்டம் நேரிடும் என்று கூவி எழுப்பிவிட்டாயே! "சோம்பற் காரனுக்கு வாழைப்பழம் தோலோடே" என்ற பழமொழிப்படி நான் சோம்பலாக இருந்த பொழுது என்னை

"முயற்சி திருவினையாக்கும்
முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்"

அல்லவா? ஆகவே சோம்பலை விட்டுச் சிட்டுக் குருவியைப் போல் சுறுசுறுப்பாக இரு என்று என்னைச் சோம்பலினின்றும் தூக்கிவிட்ட தாயே!! இன்னும் எனக்கும் ஏற்பட்டிருக்க துன்பத்திற்குத் துன்பத்தின் பின் இன்பம் ஏற்படும் என்றும் "வெய்யிலில் நின்றுற்றுன் நிழலின் அருமை தெரியும்" என்றும் அச்சமடைந்தபொழுது "மலையே யரினும் தலையே கம்" என்று மனத் திட் கொண்டு, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று உன் மனதைத் தைரியப்படுத்து என்றும், ஏக்கமடைந்தபொழுது ஒன்றற்காகவும் ஏங்காதே, கலங்காதே. எல்லாம் ஈனியாளுமீசன் செயல் என்று துணிந்து இயற்கையின் வழியே செல் எனவும் என்னைத் தேற்றிப் போற்றி வளர்த்த கருணை மிகுந்த தாயே உனக்கு வணக்கம்.

கருவியாகிய சிறு வீட்டில் கண்ணற்ற சிறு குழந்தை போல அறிவற்று இருந்த என்னை வெளியே வரச் செய்து துன்பமென்னும் முட்கட்டைகளை யெல்லாம் முன்னே பரப்பி உண்மை யென்று சொல்லப்படும் பொய்யாகிய இவ்வுலகை எனக் களித்துப் போய் உலாவிவா என்று என்னைவிட்ட அன்னையே!

வினையயத்தாற் பிறக்கும் அண்டசம், சுவேதசம், உற்பீசம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களும்; தேவர், நரர், மிருகம், பட்சி, ஊர்வன, நீர்வாழ்வன, விருட்சமென்னும் எழுவகைப் பிறப்புக்களும்; இவற்றினின்று விரிந்த எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களும் ஆகிய இவைகளெல்லாம் பூதசம்பந்தமெனப்பட்டு உப்படித் தோன்றியனவோ அப்படியே அழிந்து விடுந் தன்மையன; மறைவாய் பஞ்ச பூதங்கள் தாமும் ஒன்றனுள் ஒன்றாக அடங்கிவிடும். ஆனால் மிகுதியாக நிலை பெற்றிருப்பது ஒன்றுண்டு. அது எதுவெனில் தான் முதலீறுமாகி மருவிடு (ம'மு) மகாநிழுத்த சித்துருவாகிய முருகவன்னையாகிய தாங்களே யாகும். தாங்கள் வெட்டவெளியாகிய சிதாகாயனெனவும், ஆதாரமற்றவனெனவும், வேதவேதாந்தங்களும் உபநிடதங்களும் கூறும் உண்மைப் பொருளெனவும், ஒப்பற்ற சோதியெனவும், அருள் உரு எனவும், இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவெனவும், புத்திரனைத் தன் வயிற்றினின்று வெளிப்படுத்தலும், பேரிடுதலும், அமுதூட்டலும், வினையாட்டுக் காட்டலும், நன்மை வினையும்படி நியமமைய உறக்கி இடர் நீர்த்தலும் அயில்கொள்ளத்தாலாட்டலுமாகிய தொழில்களைச் செய்யும் தாயெனவும் யான் எனது மாயப் பிரபஞ்ச யாத்திரையின் பயனாக அறிந்து கொண்டேன்.

அன்னையே! இவைகளையெல்லாம் என் கண்களால் பார்த்துச் சகிக்க முடியாதவனாய் இருக்கின்றேனாதலால் எனக்கு நீர் ஓர் வரந்தந்து என்னைக் காப்பாற்றும். அவ்வரந்தான் என்னவென்று கேட்பீரா? ஆம். அது இறவாத இன்ப அன்பு வேண்டும். பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல் உன்னை நான் மறவாமை வேண்டும். இன்னும் நீர் ஆனந்த நடனமிடும்போது உமது பாதார விந்தத்தின் கீழிருக்க வேண்டுமென்பதே. என் தாயே! என்மாதாவே!! என் அன்னையே!!! என்னைக் காப்பாற்றும்படி உம்மை வணங்குகின்றேன். கருணைக் கடலாம் முருகவன்னையே உமக்கு அனந்தகோடி நமஸ்காரம்.

N. வைத்திலிங்கம்
& கம்பெனி
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 65 1-4-38—31-3-39) தி

யாழ்ப்பாணம்
ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

[illegible] சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Y47. 21-11-38—20-11-39
திங்.

QUINOHEMIN
BENGAL CHEMICAL & PHARMACEUTICAL WORKS, LTD. CALCUTTA
Quinohemin
SPECIFIC for MALARIA & RAPID BLOOD FORMER

குவினோ ஹெமின்

மலேரியாச் சுரத்தையும்
அதனாலேற்படும்சோகையை
யும் போக்குவதற்குப் பெரி
தும் பயன் விளைக்கும்
குவினைன்
ஓர் கானிக் இரும்பு எவணய
அம்சங்கள் ஆதியவற்றைப்
பொருத்த முறக் கொண்ட
கலவை மருந்து.

வைத்தியர்களாலும் பொது
ஜனங்களாலும் உபயோகித்துப்
பார்க்கப்பட்டுப் புகழ்பெற்றது.

பெங்கால் கெமிக்கல்
கல்கத்த : பம்பாய்.

ஏஜென்ற்:- தேவர் அன் கம்பனி மெயின் ஸ்ட்ரீட் கொழும்பு

கந்தபுராணக் கவிநுட்பம்

திருக்கல்யாணப் படலம்

[வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்பாற் கேட்டெழுதப் பெற்ற பிரதியினின்று எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

கரும்பு நேர்மொழிக் காரிகை மாதரார்
விரும்பி வேண்டவு மேவலர் போலுமால்
அரும்பொன் மேனியும் மண்ணலுக் குள்ளமும்
இரும்பு கொல்லென் றியம்பிடு வார்சிலர்.

கருப்பஞ்சாறு போன்ற இனிய மொழியைப் பேசும் மகளிர்கள் தாமாகக் காதல்கொண்டு இரக்கவும் வந்து சேர மாட்டார் போலும்; எங்கள் தலைவராகவுள்ள இப்பெருமானுக்குத் திருமேனி பொன்மயமாக, மனம் மாத்திரம் இரும்புபோற கடினமாக இருக்கின்றதே (இது என்ன விபரீதம்) என்று கவல்கின்றார்களாஞ் சில மகளிரென்பது கருத்து.

உயிர்களாகிய நாங்களாகவே இப்பெருமானைத் திருவருள் பாலிக்கும் வண்ணம் இரப்பவும் இம் முதல்வர் கருணை கூர்கின்றிலர். மாற்றுயர்ந்த பொன்போல் மிளிருந் திருமேனியை யுடைய எம்பெருமான் எங்கள் விஷயத்திற் கருணை புரியாதிருத்தல் எக்காரணம் பற்றியோ எனக் கவல்கின்றனவாஞ் சில உயிர்கள். பெருமானுடைய தரிசனங் கிடைத்தும் பூரண அநுக்கிரகங் கிடைக்கவில்லையென்றபடி.

[எம் அண்ணலுக்கு மேனி அரும்பொன் உள்ளமும் இரும்பு கோல் என இயைக்க] (19)

நெருக்கு பூண்முலை நேரிழை யார்க்குமால்
பெருக்கி னூரவர் பேதுற லோர்கிலார்
உரைப்ப தென்கொ லுயிர்க்குயி ராகியே
யிருக்கு மிங்கிவ ரென்றுரைப் பார்சிலர்.

மார்பின் இடையே நெருங்குகின்ற ஆபரணங்கள் படிந்த தனங்களையுடைய மகளிருக்குக் காதலை மூளச் செய்து விட்டார்; (ஆனால்) அம்மகளிர் அதனால் வருந்துகின்றமையைத் திருவுளத்திற் கொள்கின்றிலர்; இப்படிப் பட்ட இவர் உயிர்கள் தோறும் வியாபித்துள்ளார் (ஆன்மநாயகராயுள்ளார்) என்று அறிஞர் கூறுவதென்னையோ?

பக்தி முறுகிய ஆன்மாக்களைத் தமது தரிசனத்தினால் மேன்மேலும் அன்பு பெருகச் செய்து விட்டு, அந்த அன்பு மேலீட்டினால் அவருடைய திருவருளைப் பெறுதற்கு ஆன்மாக்கள் ஆசையுற்று வருந்த அங்ஙனம் வருந்தாது காத்தலின்றி இப்பெருமான் வாளாவிருக்கின்றார். உயிர்கள் தோறும் வியாபித்து அந்த உயிர்களின் நோக்கத்தை அறிந்து அருள் புரியும் தன்மை இப்பொழுது இப்பெருமானிடத்தில் இல்லாதிருக்க இவரை ஆன்மநாயகரெனக் கூறுதல் அடாதென்பார் "இங்கிவர், உயிர்க்குயிராகியே இருக்குமென்று உரைப்பதென்கொல்" என்றனர். (20)

திருகு வார்சடைச் செய்யனை நோக்கினின்
றுருகு வார்சில ருள்ளுற வெம்பியே
கருகு வார்சிலர் காதலி மாரொடும்
பெருகு காதலைப் பேசுகின் றார்சிலர்.

முறுகிய நீண்ட சடைமுடியினையும் பவளம்போன்ற திருமேனியையு முடையவராகிய பரமசிவனைத் தரிசித்த மாத்திரத்தே சில மகளிர் வேறு செயலற்று நின்று மனம் உருகுகின்றார்களாம்; உள்ளமானது அதிக காதலையடையச் சில மகளிர் அதனால் வாடுகின்றார்களாம்; தம் தோழியருடன் தம்மிடத்து அதிகப்படும் காதலின் இயல்பைச் சொல்லுகின்றார்களாம் சில பெண்கள் என்பது கருத்து.

பெருமானுருடைய திருக்கோலத்தை நேரில் தரிசிக்கும் பேற்றைப் பெற்ற உயிர்கள் சில மனம் நெக்குநெக்குருக, சில பூரண அநுக்கிரகம் இன்னமுங் கிடைக்கவில்லையேயென உள்ளம் வாட்டமடைய, சில பெருமானுருடைய திருக்கோல தரிசனத்தையும் திருவருட்பேற்றையும் தம்மோடொத்த பக்குவிகளுடன் கலந்து பேசுகின்றனவென்பதாம். உருகுதலுங் கருகுதலும் காதலைப் பேசுதலும் அந்த அந்த ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்ற செயல்களாமென்க. (21)

வேறு ளார்மெய் விளர்ப்பினை நோக்கியே
மீறி லாரை யிவரணைந் தார்கொலோ
நீறு மெய்யி னிலவிய தென்றவர்ச்
சீறி யேயிகல் செய்திடு வார்சிலர்.

அங்கு நிற்கின்ற வேறு பெண்கள் சிலருடைய உடம்பு வெளுப்படைந்திருத்தலைக் கண்டு, தோற்றமும் முடிவுமில்லாத இப்பெருமானாரை இப்பெண்கள் கூடினர் போலும் (ஏனெனில், அவருடைய திருமேனியில் விளங்கும்) திருநீறு இவர்களுடைய உடம்பிலும் படிந்திருக்கின்றதே என்று, (பொறாமை காரணமாக) அம்மகளிரைச் சினந்து அவர்களுடன் சண்டையிடுகின்றார்களாம் சில மகளிர்கள் என்பது கருத்து.

பெருமானுருடைய தரிசனத்தினால் அதிக காதல் கொண்டு தம் உடம்பு வெளுப்படைந்த சில மகளிரை வேறு சிலமகளிர்கள் கண்டு, இவர்கள் பெருமானையணைந்தமையினால் அவர் திருமேனியிற் பொருந்திய விபூதி தம்முடம்பிலும் திவளப் பெற்றனரென விபரீதமாக விளங்கி அவர்கள்மீது பொறாமை கொண்டு அவர்களுடன் மாறுபட்டனரென்பதாம்.

சிவசாரூபம் பெற்ற சில ஆன்மாக்களைக்கண்டு ஆங்குள்ள ஏனைய சில உயிர்கள் தாமும் அங்ஙனம் சிவசாரூபத்தை படைதல் வேண்டுமென வேணவாக் கொண்டன என்பதாம். (22)

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாம். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

பத்திரக்கிரயம்

வருடம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள்
தமிழ் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12-00
தொடுவாய்ப் பகுதி 9-00 இங்கிலீஷ் தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினலன்றிக்
கவனிக்கப்பட மாட்டா

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna for and on behalf of the Proprietors the Saiva paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna on Monday 29th July 1940.